குழந்தைப் பாதுகாப்பு வரிசை எண் 03

# குழந்தைப் பாதுகாப்பு

## - ஒரு அறிமுகம்

அன்பு குழந்தைகளுக்கு
அச்சமில்லா சமூகத்தை
உருவாக்குவோம்



unicef for every child

INDIAN COUNCIL FOR CHILD WELFARE TAMIL NADU

அன்பு குழந்தைகளுக்கு அச்சமில்லா சமூகத்தை உருவாக்குவோம்

# குழந்தைப் பாதுகாப்பு

## - ஒரு அறிமுகம்

தலைப்பு : குழந்தைப் பாதுகாப்பு - ஒரு அறிமுகம்

முதல் பதிப்பு : டிசம்பர் 2019

உறுதுணை : சமூகப் பாதுகாப்புத் துறை, தமிழ் நாடு
யுனிசெஃப், தமிழ் நாடு

நூலாக்கம் : திருமதி. கிரிஜா குமார்பாபு,
கௌரவ பொது செயலாளர்
இ.கு.ந. சங்கம், தமிழ் நாடு

திருமதி. அ. சரஸ்வதி
முதல்வர் - பயிற்சி பிரிவு,
இ.கு.ந. சங்கம், தமிழ் நாடு

திரு. ஜி. குமரேசன்
சோஷியல் பாலிசி ஸ்பெஷலிஸ்ட்,
யுனிசெஃப், தமிழ் நாடு & கேரளா

திட்ட மேலாண்மை : டாக்டர். இரா. ஐஸ்வர்யா
திட்ட மேலாளர், மாடல் பிராஜக்ட் ஃபார் ஆல்டர்நேடிவ் கேர்,
இ.கு.ந. சங்கம், தமிழ் நாடு

கணினியாளர் : செல்வி. பு. மேனகா
இ.கு.ந. சங்கம், தமிழ் நாடு

வடிவமைப்பு : பி.எஸ்.எஸ். ராவ்
ஸ்பெக்ட்ரம் கிராஃபிக்ஸ், சென்னை

அச்சகம் : சாய் பாண்ட் பிரின்ட் சிஸ்டம்ஸ், சென்னை



# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| பிரிவு - 1 | குழந்தைப் பாதுகாப்பு ஒரு பரந்த பார்வை | 5 |
| பிரிவு - 2 | குழந்தை உரிமைகள் - ஓர் அறிமுகம் | 7 |
| பிரிவு - 3 | குழந்தைப் பாதுகாப்பை எளிதில் புரிந்துக்கொள்வோம் | 10 |
| பிரிவு - 4 | குழந்தைப் பாதுகாப்பும் இன்றைய சூழலும் | 15 |
| பிரிவு - 5 | குழந்தைப் பாதுகாப்பை உறுதி செய்யும் மைல்கற்கள் | 18 |
| பிரிவு - 6 | குழந்தைப் பாதுகாப்பிற்காக இயற்றப்பட்ட சட்டங்கள் | 26 |
| பிரிவு - 7 | குழந்தைகளுக்கான தேசிய செயல்பாட்டுத் திட்டம் 2016 | 30 |
| பிரிவு - 8 | குழந்தைப் பாதுகாப்பு அனைவரின் பொறுப்பு | 34 |
| பிரிவு - 9 | குழந்தைப் பாதுகாப்பு - கனவு மெய்ப்படும்... | 36 |




பிரிவு - 1

# குழந்தைப் பாதுகாப்பு ஒரு பரந்த பார்வை

நம்முடைய அன்றாட அல்லல் நிறைந்த வாழ்க்கையில் வசந்தத்தைத் தருபவர்கள் குழந்தைகளே. குழந்தைகள் வருங்கால சமுதாயத்தின் ஆணி வேர். அனைவராலும் போற்றப்பட வேண்டியவர்கள். குழந்தைகளைப் பற்றி நாம் யாரிடம் பேசினாலும் குழந்தையே எங்கள் உயிர் மூச்சு, குழந்தைகளுக்காக உயிரை கூட தருவோம் என்று கூறுவதைக் கேட்கிறோம். ஆனால் யதார்த்தமாக, குழந்தைகளுக்கு பாதுகாப்பு இருக்கிறதா என்ற கேள்வி நம்முன் வைக்கப்படும்பொழுது ஆம் என்ற பதிலை நம்மால் உடனடியாக கூற இயலவில்லை. மாறாக இப்பொழுது இருக்கும் உலகம் குழந்தைகளுக்கு அச்சுறுத்தும் இடமாக மாறிவருகின்றது. குடும்பம், பள்ளி, சமூகம் என்ற மூன்று தளங்களிலும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் நாள்தோறும் பெருகிவருகின்றன.

மனிதனின் வாழ்க்கையில் மிக முக்கியமானதாகவும், அடிப்படையாகவும் அமைவது குழந்தைப் பருவமே. “ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா” என்ற பழமொழிக்கு இணங்க குழந்தை பருவத்தைப் போற்றி பாதுகாக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. குழந்தை என்பவர் தனித்துவம் மற்றும் சிறப்பு வாய்ந்தவர்கள் என்பதற்காகவே ஐக்கிய நாடுகள் சபை குழந்தை உரிமைகளுக்கான உடன்படிக்கையை (சாசனம்) உலகிற்கு அளித்தது. உடன்படிக்கை ஏற்படுத்தி 30 வருடங்களாகிய நிலையில், இன்றும் குழந்தைகளின் பாதுகாப்பைப் பற்றி எண்ணும்பொழுது குழந்தைகளுக்கு எதிரான பிரச்சனைகளுக்கு, மனிதனால் ஏற்படுத்தக்கூடிய துன்புறுத்தல் மட்டுமல்லாமல் கவனக் குறைபாடு, மக்கள் ஆதரவின்மை, பொருளாதாரம், கலாச்சாரம், போன்றவையும் பின்னணி காரணமாக இருப்பதை பல நிகழ்வுகள் மூலமாக பார்க்க முடிகின்றது. இத்தகைய சூழல்கள் நேரிடையாக குழந்தையின் உரிமைகளான உயிர் வாழ்தல், வளர்ச்சி, பாதுகாப்பு மற்றும் அவர்களின் எதிர்காலம் அனைத்தையும் பாதிக்கின்றன.

குழந்தை உரிமைகள் சாசனத்தில் ஒரு சில விதிகள் குழந்தைப் பாதுகாப்பை பற்றி கூறியிருந்தாலும், குழந்தை பாதுகாப்பு என்பது அனைத்து உரிமைகளையும் தன்னிடத்தே உள்ளடக்கியும், நேரடியான சமூக பாதுகாப்பிற்கான, உத்திரவாதத்தையும் குறிக்கின்றது.

இதனால்தான் குழந்தை பாதுகாப்பு என்பது பலதரப்பட்ட நிலையான பொருளாதார ரீதியாகவும், கலாச்சார ரீதியாகவும் அணுக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

இதனையொட்டியே குழந்தையின் பாதுகாப்பு உரிமை குறித்த கருத்துக்களை விரிவாகவும், எளிய முறையில் புரிந்துக்கொள்ளும் வகையிலும் பின்வரும் பக்கங்களில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.



This award is not just for me. It is for those forgotten children who want education. It is for those frightened children who want peace. It is for those voiceless children who want change.

It is a prize for all children who want education, for children who want peace and for children who want change.

***- Malala Yousafzal***
*Youngest recipient of Noble Award for Peace*

இந்த விருது எனக்கு மட்டுமானது அல்ல. கல்வியை விரும்பும் குழந்தைகளுக்கானது. அமைதியை விரும்பும் குழந்தைகளுக்கானது. மாற்றத்தை விரும்பும் குழந்தைகளுக்கானது.



கல்வி, அமைதி, மாற்றத்தை விரும்பும் குழந்தைகளுக்கு இது ஒரு பரிசு ஆகும்.

*- மலாலா யூஸப்சால்*
*அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற முதல் பெண் குழந்தை*

பிரிவு - 2

# குழந்தை உரிமைகள் ஓர் அறிமுகம்

குழந்தை பாதுகாப்பை பற்றி அறிய முற்படும் முன்னர், குழந்தை உரிமை என்றால் என்ன என்பதை புரிந்துக்கொள்ள வேண்டும். மனித உரிமை சாசனத்தின் படியே குழந்தைகளுக்கும் தனியாக உரிமைகள் உண்டு என்ற கண்ணோட்டத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு, ஒரு நீண்ட நெடிய ஆலோசனைக்கு பின்னர் ஐ.நா. சபையால் முடிவு செய்து அதன்படி 1989-ம் வருடம் குழந்தைகளுக்கான உரிமை சாசனம் வெளியிடப்பட்டது. இந்திய அரசாங்கம் 1992-ம் வருடம் இந்த குழந்தை உரிமை சாசனத்தை ஏற்றுக் கொண்டு கையொப்பமிட்டது. குழந்தை உரிமை சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை கொள்கைகள் :-

1. 18 வயது நிரம்பாத அனைவரும் குழந்தைகளே
2. பாகுபாடின்மை - எந்தவித வேறுபாடுமின்றி அனைத்து குழந்தைகளையும் ஒரே மாதிரியாக நடத்துதல்
3. எல்லா நிலைகளிலும் குறிப்பாக பேரிடர் காலங்களில் குழந்தைகளுடைய பாதுகாப்பை முன்னிலைப்படுத்துதல்
4. குழந்தையின் சீரிய நலனைக் கருத்தில் கொண்டு அனைத்து முடிவுகளையும் எடுத்தல்

இந்த மதிப்பீடுகளின் அடிப்படையில் குழந்தை உரிமை சாசனத்தில் 54 விதிகள் கூறப்பட்டுள்ளன. இவை அனைத்தையும் உள்ளடக்கி குழந்தை உரிமைகளை நான்கு அடிப்படை கோணங்களில் வகுத்துள்ளனர்.



மேலும் குழந்தை உரிமைகள் சாசனத்தில் கூறப்பட்டுள்ள நான்கு அடிப்படை உரிமைகளும் ஒன்றொடொன்று தொடர்புடையதாகும். ஒரு உரிமையிலிருந்து மற்றொரு உரிமையை பிரித்து பார்க்க இயலாது. உயிர் வாழ்தல் மற்றும் வளர்ச்சி உரிமைகள் அனைவராலும் எளிதாக புரிந்துக்கொள்ளப்பட்டன. ஆனால் பங்கேற்பதற்கான உரிமை எல்லோரும் புரிந்துகொண்டு செயல்படுத்துவதில் தடைகள் உள்ளன. முக்கியமாக குழந்தை பாதுகாப்பு உரிமையை மையப்படுத்தினால் அது எவ்வாறு மற்ற அனைத்து உரிமைகளுடன் இணைந்துள்ளது என்றும், பாதுகாப்பு உரிமையை தனியாக பிரித்துப் பார்க்க இயலாது என்றும் புரிய வரும். ஏனெனில் அனைத்து உரிமைகளுக்கும் அடிப்படையாக இருப்பது பாதுகாப்பு உரிமை ஆகும்.

குழந்தைகள் எந்த நிலையிலும் சுரண்டலுக்கு உள்ளாக்கக் கூடாது என்றும், எல்லாவிதமான கொடுமைகளிலிருந்தும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை குழந்தை உரிமை சாசனம் விதி - 19ல் குறிப்பிட்டுள்ளது. உழைப்பின் மூலமாக நடைபெறும் பொருளாதார சுரண்டல், போதைப்பொருட்களுக்கு அடிமையாக்குதல், பாலியல் ரீதியாக கொடுமைப்படுத்துதல், குழந்தையைக் கடத்துதல் போன்ற பாதுகாப்பற்ற சூழல்களிலிருந்து குழந்தைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை தனித்தனியாக சாசனத்தில் குறிப்பிட்டுள்ளது. இதை கீழே காணலாம்:

**குழந்தை உரிமை சாசன விதிகளில் சில :**

விதி – 19 : புறக்கணிப்பு, வன்முறை போன்றவற்றிலிருந்து குழந்தை பாதுகாக்கப்பட வேண்டும். இவற்றைத் தடுக்கவும், தண்டிக்கவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கவும், அரசு திட்டங்களை உருவாக்க வேண்டும்.

விதி – 32 : பொருளாதாரச் சுரண்டலில் இருந்தும், அவர்களின் ஆரோக்கியம், கல்வி, வளர்ச்சி ஆகியவற்றை பாதிக்கக்கூடிய வேலைகளில் பங்கேற்பதில் இருந்தும் பாதுகாக்கப்பட குழந்தைகளுக்கு உரிமை உண்டு.

விதி – 33 : போதைப் பொருள் உற்பத்தி, விற்பனை, பயன்படுத்துதல் ஆகியவற்றிலிருந்து பாதுகாக்கப்படக் குழந்தைகளுக்கு உரிமை உண்டு.

விதி – 34 : குழந்தைகள் அனைத்துவிதமான பாலியல் சுரண்டல் மற்றும் பாலியல் வன்முறைகளிலிருந்து பாதுகாக்கப்பட உரிமையுள்ளது.

விதி – 35 : குழந்தைகள் விற்பனை, கடத்தல் ஆகியவற்றைத் தடுக்க, பொருத்தமான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும்.

விதி – 36 : குழந்தைகள் நலன் தொடர்பான எந்தவொரு அம்சத்திற்கும் தீங்கு விளைவிக்கக்கூடிய எல்லாவிதமான சுரண்டல்களிலிருந்தும் குழந்தைகளைக் காக்க வேண்டியது அரசின் கடமையாகும்.

விதி 40 : சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடும் குழந்தைகளுக்கு, சட்ட உதவி பெறவும், சமுதாயத்தில் ஆக்கபூர்வமாகப் பங்கு பெறுவதற்கான மறுவாழ்வு திட்டங்களில் உதவி கோருவதற்கும், கௌரவமாய் வாழும் வகையில் சிகிச்சை பெறுவதற்கும் உரிமை உண்டு.

குழந்தை உரிமைகள் சாசனம் நடைமுறையில் கொண்டுவரப்பட்டு 25 ஆண்டுகள் (2014ம் ஆண்டு) ஆகிவிட்டது. நாட்டின் வளர்ச்சிகளை மேம்படுத்துவதற்கான இலக்குகளை 2000ம் ஆண்டு மில்லேனியம் மேம்பாட்டிற்கான இலக்குகள் என்று, எட்டு இலக்குகளை நிர்ணயித்து 2015ம் ஆண்டிற்குள் நிறைவேற்றுவதாக இருந்தது. ஆனால் இவற்றில் ஒரு சில இலக்குகளையே நிறைவேற்ற முடிந்தது. சில இலக்குகள் நிறைவேற்றுவதற்கான செயல்பாடுகளில் தொய்வு ஏற்பட்டிருந்தது. இதைக் குறித்த கருத்து பரிமாற்றலில், மக்களிடையே அடிப்படையான சுகாதாரம், வறுமையின்மை, சமத்துவம், இயற்கையை போற்றுதல் போன்ற பல்வேறு அமைப்புகளுடன் குழந்தை உரிமைகளை இணைத்து பார்ப்பதே சாலச்சிறந்தது என்று உலகளாவிய கருத்தாளர்கள் முடிவுக்கு வந்தார்கள்.



ஒரு சமுதாயத்தில் உள்ள அனைத்து மக்களுக்கும் அடிப்படையான உத்திரவாதங்களை நிலைநிறுத்தப்பட வேண்டிய கட்டாயத்தையும், இதன் மூலம்தான் குழந்தைகளின் உரிமைகளை அடைய முடியும் என்றும் உறுதி செய்யப்பட்டது. இதன் அடிப்படையில் 2015ம் ஆண்டு நிலைத்த மேம்பாட்டிற்கான 17 இலக்குகளை ஐ.நா. சபை வெளியிட்டது. குழந்தைகளின் உரிமைகள் தொடர்புடைய செயல்பாடுகளை இந்த நிலைத்த மேம்பாட்டு இலக்குகளில் வகுக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் குழந்தை உரிமைகள் பற்றியும், குழந்தை பாதுகாப்பு பற்றியும் இருந்த கண்ணோட்டம் விரிவாக்கப்பட்டது.

SUSTAINABLE DEVELOPMENT GOALS

நிலைத்த மேம்பாட்டு இலக்குகள் (Sustainable Development Goals - SDG) முக்கியமான ஐந்து செயல்கூறுகளை முன் நிறுத்தி உள்ளது.




இறப்பைத் தடுத்து நிறுத்துதல், பசிக்கொடுமைக்கு முடிவு செய்தல், குழந்தைகள் ஊட்டச்சத்து உணவை அடைவதை உறுதி செய்தல், அனைத்து குழந்தைகளுக்கும் கல்வி மற்றும் கற்றல் திறனை மேம்படுத்துதல், வன்முறைக்கு அஞ்சாமல் குழந்தைகள் வாழ்வதை உறுதி செய்தல், அனைத்து வகையான வன்முறைகளையும் முடிவுக்குக் கொண்டுவருவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளல், அமைதியான மற்றும் நியாயமான சமூகத்தை மேம்படுத்துதல் ஆகிய அனைத்தும் நிலைத்த மேம்பாட்டு இலக்குகளில் உள்ளடங்கியுள்ளது. இதன் அடிப்படையில் இந்திய அரசாங்கம் குழந்தைகளுக்கான செயல்திட்டத்தை (National Plan of Action for Children) உருவாக்கியுள்ளது.

பிரிவு - 3

# குழந்தை பாதுகாப்பை எளிதில் புரிந்துக்கொள்வோம்


## 3.1 குழந்தை என்பவர் யார்?

குழந்தை உரிமைகள் சாசனத்தில் தெளிவாக 18 வயது பூர்த்தியடையாத அனைவரும் குழந்தைகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதை பின்பற்றியே இந்தியாவில் இயற்றப்பட்ட இளைஞர் நீதிச் (பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015ன் படி குழந்தைகள் யார் என்று வரையறை செய்யும்பொழுது 18 வயது பூர்த்தியடையாத அனைவரும் (ஆண், பெண்) குழந்தைகள் என்று குறிப்பிட்டுள்ளது. இளைஞர் நீதி (குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015, குழந்தைகள் குறித்த பிற சட்டங்களுக்கும் ஒரு வழிகாட்டியாக உள்ளது.

## 3.2 குழந்தை பாதுகாப்பு என்றால் என்ன?

குழந்தை பாதுகாப்பு என்பது குழந்தைகளின் உரிமைகள் மட்டுமின்றி, எல்லா நிலைகளிலும் குழந்தைகளின் தேவைகளை மையப்படுத்தி, அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பு கட்டமைப்புகளை உறுதி செய்வதாகும்.

இது வெறும் சமூகபாதுகாப்பு மட்டுமன்று; விளிம்பு நிலையில் உள்ள குழந்தைகளைத் தகுந்த யுக்திகளின் மூலம் காப்பாற்றி அவர்களின் முழு வளர்ச்சிக்கான உத்தரவாதத்தைத் தருவது என புரிந்துக்கொள்ள வேண்டும். எந்த சூழ்நிலையிலும் 18 வயதிற்குட்பட்டுள்ள அனைவரும் குழந்தைகள்தான் என நாம் கருத்தில் கொள்ள வேண்டும். எனவே குழந்தைகளுக்கான பாதுகாப்பு வளையத்தை உருவாக்கி இனம், மொழி, சாதி, போன்றவற்றின் அடிப்படையில் வேறுபடுத்தாமல் அனைவரையும் பாதுகாப்பு வளையத்திற்குள் கொண்டுவரப்பட வேண்டும். பாதுகாப்பு வளையத்தை குறித்த விரிவான விளக்கம் இப்பிரிவின் கடைசி பகுதியில் (3.8ல்) காணலாம்.




## 3.3 எந்த சூழலிலிருந்து குழந்தைகள் பாதுகாக்கப்பட வேண்டும்?

எல்லாவிதமான அச்சுறுத்தல்கள், பெருகி வரும் சுரண்டல்கள், குடும்ப வன்முறை, கடத்தல், பள்ளி தண்டனைகள், பெற்றோரை பிரிந்திருத்தல் அல்லது பெற்றோர் இல்லாத குழந்தைகள், இவ்வாறு கொடுமைக்குள்ளான குழந்தைகளை இவை அனைத்திலிருந்தும் பாதுகாக்கப்பட வேண்டும். மேலும் தற்பொழுது பெருகிவரும்

குழந்தைகளுக்கான பாலியல் வன்முறை, இணையதளத்தின் மூலம் வரும் அச்சுறுத்தல்கள், மன அழுத்தத்தின் காரணமாக நிகழும் தற்கொலைகள் போன்ற புதியதாக எழுந்துள்ள பிரச்சனைகளிலிருந்து குழந்தைகள் பாதுகாக்க படவேண்டும்.

குழந்தைகள் இருக்கக்கூடிய இடங்களான குடும்பம், பள்ளி, குழந்தை சார்ந்த நிறுவனம் போன்றவை குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டிய இடமாக இருக்க வேண்டும்.


## 3.4 குழந்தை பாதுகாப்பு எவ்வாறு சாத்தியமாகும்?

அரசாங்க அமைப்புகள், குழந்தைகளிடையே வேலை செய்யும் அனைத்து பணியாளர்கள், பெற்றோர், ஆசிரியர், அதாவது 18 வயதிற்கு மேல் உள்ள அனைத்து நபர்கள் மற்றும் குழந்தைகள் உட்பட அனைவருக்கும் குழந்தை பாதுகாப்பை பற்றிய விழிப்புணர்வு மற்றும் பயிற்சிகள் அளித்து அதற்கான செயல்திட்டங்களை மேற்கொள்ளுவதன் மூலமாக குழந்தை பாதுகாப்பை உறுதி செய்ய இயலும்.

## 3.5 இதற்கு யார் பொறுப்பு?

பதினெட்டு வயதிற்கு மேல் உள்ள அனைவருமே குழந்தைகளின் பாதுகாப்பிற்கு கடமை உள்ளவர்களாக இருக்கிறார்கள். அரசாங்கம், ஆசிரியர், பொதுமக்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், சமூக சேவகர்கள், பெற்றோர், குழந்தையை பார்த்துக் கொள்ளும் நபர்கள், மக்கள் தொடர்பு நிறுவனங்கள், நீதி துறையை சார்ந்த நீதிபதிகள் மற்றும் வல்லுனர்கள், காவல்துறையினர் போன்ற அனைவருமே குழந்தைகளின் பாதுகாப்பிற்கு பொறுப்பானவர்கள் ஆவர்.

## 3.6 எப்பொழுது குழந்தை பாதுகாப்பு முக்கியம்?




எல்லா நிலைகளிலும், எல்லா தளங்களிலும் குழந்தையின் பாதுகாப்பை உறுதி செய்யப்பட வேண்டும். குழந்தையைப் பாதுகாப்பதற்கு, இடைவிடாமல் கண்காணிப்பது அவசியமாகும். வன்முறை, அவசரக்காலங்கள், இயற்கைச் சீற்றம் மற்றும் எந்த சூழலிலும், எல்லா நேரத்திலும் இடையுறாமல் கண்காணித்து குழந்தையை பாதுகாப்பது மற்றும் வன்கொடுமைக்கு ஆளாகமல் தடுப்பது முக்கியமாகும்.

## 3.7 இதை நாம் ஏன் மேற்கொள்ள வேண்டும்?

குழந்தை பாதுகாப்பை நாம் ஏன் மேற்கொள்ள வேண்டும் என்பதற்கு இரண்டு முக்கியமான காரணிகள் உள்ளன. ஒன்று உண்மையிலேயே குழந்தைகளை நம் நாட்டின் வருங்கால தூண்களாக கருதினால் அவர்களுக்கு சிறந்த சந்தர்ப்பங்கள் கொடுத்து அவர்களுடைய பாதுகாப்பை உறுதி செய்வது நமது தார்மீக கடமையாகிறது.

இரண்டாவதாக, குழந்தை பாதுகாப்பை உறுதி செய்யாமல் நம் நாட்டின் முன்னேற்றத்தை அளவிட முடியாது. குழந்தைகள் நம்முடைய அடிப்படை வளங்களாக திகழ்கின்றனர். ஒரு நிமிடம் நினைத்து பார்க்கலாம். நம்முடைய குழந்தைகள் எச்.ஐ.வி / எய்ட்ஸ், காசநோய் போன்ற நோய்களுக்கு ஆளாகி இருந்தால் எவ்வாறு வளமான இளைஞர்களாக உருவாகுவார்கள்? கல்வியின்மை, திறமையின்மை, மதிப்பீடின்மை, வறுமையின் பிடியில் வாடியிருத்தல், மத, சாதி பிடிகளில் சிக்கியிருத்தல், போன்ற பிரச்சனைகளின் காரணமாக விளிம்பு நிலையிலேயே வாழ்க்கையை வாழ்ந்து முடித்தால், இந்தியா உலக அரங்கில் முன்னேற்றமடைந்த நாடாக விளங்க முடியாது.

இந்தியா வலிமையான நாடாக உலக அரங்கில் திகழ வேண்டுமெனில், இந்தியாவில் பிறந்து, வளர்ந்து வரும் அனைத்து குழந்தைகளுக்கும் பாதுகாப்பை உறுதி செய்தல் அவசியம். இது குறித்த செயல்திட்டங்கள் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். சட்டரீதியாகவும், அரசு செயல்பாடுகள் மூலமாகவும் குழந்தைகளின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் தர வேண்டும்.

பாதுகாப்பு சூழலுக்கான முழு சந்தர்ப்பங்களை அளிப்பதன்மூலம் வளரும் குழந்தைகளே, இந்தியாவின் முக்கிய மனித வளமாக திகழ்கின்றனர்.

## 3.8 குழந்தை பாதுகாப்பு வளையம் என்றால் என்ன?

குழந்தை பாதுகாப்பு வளையம் என்பது, குழந்தைகள் (18 வயதிற்குட்பட்ட ஆண்/பெண் அனைவரும்) உரிய பாதுகாப்பும், அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள மற்ற அனைத்து உரிமைகளும் அடைவதற்கான ஒரு வழிமுறையை குறிப்பிடுகிறது. குழந்தைகள் எங்கிருந்தாலும் முழுமையான பாதுகாப்பு அவர்களுக்கு கிடைக்க வேண்டும் என்பதன் அடிப்படையில் அனைவரும் எளிதாக புரிந்துக்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்திற்கு ஏற்ற உவமையாக பாதுகாப்பு வளையம் என்று குறிப்பிடுகின்றோம். இந்த பாதுகாப்பு வளையம் கருத்தாக்கத்தின் ஓர் வெளிப்பாடு மற்றும் கற்பனையின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. பாதுகாப்பு வளையம் எங்கு உள்ளது என்று தேடினாலும் நம்மால் அதை பார்க்க இயலாது. மாறாக குழந்தைகள் பாதுகாப்பு குறித்து பரந்த அளவில் நாம் சிந்திக்கும்பொழுது மனரீதியாக நம்மால் புரிந்துக்கொள்ள முடியும்.

பாதுகாப்பு வளையம் தடுத்தல், பாதுகாத்தல் என்ற இரண்டு மையக் கருத்துக்களை உள்ளடக்கியதாகும்.




### அ. தடுத்தல்:

தடுத்தல் என்பதன் பொருள் வரும் முன் காத்தல் ஆகும். குழந்தைகளுக்கு ஏற்படக்கூடிய வன்கொடுமை, புறக்கணிப்பு, நோய்கள், போன்ற பிரச்சனைகள் நடக்காவண்ணம் தடுப்பது மற்றும் அதற்கான பாதுகாப்பு சூழல்களை உருவாக்குவது ஆகும்.

குழந்தைகள் நம் நாட்டின் மிக முக்கியமான சொத்து என்பதை நாம் புரிந்துக்கொண்டால் தடுத்தல் செயல்பாட்டை உறுதியான எண்ணத்துடன் செயல்படுத்த முடியும். இதை வள்ளுவர் 'குற்றங்கடிதல்' என்ற அதிகாரத்தில் தெளிவாக குறிப்பிட்டுள்ளார்.

வரும் முன் காத்தலுக்கு சிறந்த உதாரணம்: அரசு வகுத்துள்ள திட்டத்தின் வழியாக எல்லா குழந்தைகளுக்கும் போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டதால், போலியோ அற்ற ஆரோக்கியமான

இந்தியா / தமிழகம் உருவாகி உள்ளது.

குழந்தைத் திருமணம், குழந்தை தொழிலாளர், குழந்தை கடத்தல், பாலியல் வன்கொடுமை போன்ற பிரச்சனைகளுக்கு சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. இச்சட்டங்களால் குழந்தைகளுக்கு ஏற்படும் பிரச்சனைகளை தடுக்க இயலும். மேலும் குழந்தைகளுக்கான அரச நலத் திட்டங்கள் மூலமும் குழந்தை பாதுகாப்பை உறுதி செய்ய இயலும்.

> "வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
> வைத்தூறு போலக் கெடும்"
> பொருள்: குற்றம் நேர்வதற்கு முன்பே வராமல் காத்துக்கொள்ளாதவனுடைய வாழ்க்கை நெருப்பின் முன்னர் வைத்த வைக்கோல் போர்போல் அழிந்துவிடும்.
> - திருக்குறள் 435

## தடுத்தலுக்கான அடிப்படையான சில செயல்பாடுகள்:

1. பொருளாதார சமூக அமைப்புகளை உருவாக்குதல். சட்டங்களை சரிவர நடைமுறைப்படுத்துதல், தேவைப்படின் புதிய சட்டங்களை உருவாக்குதல்.
2. குழந்தை பாதுகாப்பிற்கான அமைப்புகளை ஏற்படுத்துதல்.
3. குழந்தை பாதுகாப்பு குறித்த தகவல்களைப் பரப்புதல் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
4. குழந்தை பாதுகாப்பிற்கான அனைத்து அரசு துறைகளையும் ஒன்றிணைத்து செயலாக்கம் செய்தல்.
5. குழந்தைகள் பாதுகாப்பு குறித்த பலவிதமான தரவுகள் மற்றும் ஆராய்ச்சிகளின் புள்ளி விவரங்கள் அடங்கிய தொகுப்புகளை ஏற்படுத்துதல்.
6. குழந்தைகளுக்கு அரசாங்கம், கல்வி நிறுவனம் மற்றும் சமூக பிரதிநிதிகளால் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள நிதி உதவிகள் மற்றும் நலத் திட்டங்கள் குறித்த விவரங்கள் அனைவருக்கும் சென்றடைய செய்தல்.

இந்த அனைத்து செயல்பாடுகளையும் அரசாங்கம் முன்னெடுத்து செல்வதன் மூலம் சமூகத்தில் குழந்தை பாதுகாப்பை உறுதி செய்ய முடியும்.

### தடுத்தல் செயல்பாடுகளில் எதிர்கொள்ளும் சவால்கள்:

- சட்டத்தை நடைமுறைபடுத்தும்பொழுது உள்ள சிக்கல்கள்.
- பிரச்சனைகளுக்குப் பின்புலமாக இருக்கக்கூடிய சமூகம் மற்றும் சமூக ரீதியான கலாச்சாரம் ஆகும்.

## ஆ. பாதுகாத்தல் மற்றும் எதிர்கொள்ளல் :


பாதுகாத்தல் என்பது பிரச்சனைக்குள்ளான குழந்தைகளைக் கண்டெடுத்து அவர்களுக்கு உண்டான வளர்ச்சி பாதையில் இணைப்பது மற்றும் அவர்களுடைய மறுவாழ்விற்கு ஆவன செய்தல் ஆகும்.

குழந்தைகள் இருக்கும் இடங்களான குடும்பம், பள்ளி, விடுதி போன்ற எல்லா இடங்களும் அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லாமல் இருக்கின்றன. தந்தை அல்லது சகோதரன் குழந்தையை பாலியல் ரீதியாக கொடுமை செய்தல், பள்ளி படிப்பை நிறுத்திவிட்டு வேலைக்கு அனுப்புதல், 18 வயதிற்கு முன்னரே திருமணம் செய்துவைத்தல், ஆசிரியர்களால் ஏற்படும் துன்பங்கள் போன்ற இவ்வாறான அனைத்து செயல்களும் குழந்தைகளுக்குப் பாதுகாப்பற்ற சூழலை உண்டாக்குகிறது.

குழந்தை பாதுகாப்பு அனைவரையும் சார்ந்து இருக்கக்கூடியதாக உள்ளது. ஆகவே அரசாங்கம், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் போன்ற அனைத்து நிறுவனங்களும்; குழந்தை பாதுகாப்பிற்குத் தேவையான தகவல்கள் அனைவரையும் சென்றடைய செய்ய வேண்டும். செய்தித் தாள், தொலைக்காட்சி போன்ற மக்கள் தகவல் ஊடகங்கள் இதை குறித்த தகவல்களையும், பெற்றோர், ஆசிரியர் கடமைகள் என்ன என்பதையும் தகுந்த முறையில் தெரியப்படுத்த வேண்டும். குறிப்பாக ஊடகங்கள், குழந்தைக்கு உரிமை மீறல்கள் நடக்கும்பொழுது அதை குறித்தும், அதற்காக எடுத்த நடவடிக்கைகள் குறித்தும், உரிமை மீறல் நடக்காவண்ணம் எவ்வாறு தடுப்பது என்பது குறித்தும், நேர்மறையான கருத்துக்களைப் பரப்ப வேண்டும்.

## பாதுகாப்பற்ற சூழலில் உள்ள குழந்தைகளின் மறுவாழ்விற்கான செயல்பாடுகள்:

- குழந்தைகளை விடுதியில் சேர்ப்பதற்கான அடிப்படை தகுதிகளை நிர்ணயம் செய்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்
- குழந்தை பாதுகாப்பு கொள்கையை கட்டாயமாக கடைப்பிடித்தல்
- மறுவாழ்விற்கான பல்வேறு யுக்திகளையும், அமைப்புகளையும் மேம்படுத்துதல்
- குழந்தை தனக்கு ஏற்பட்ட கொடுமையை யாரிடமாவது பகிர்ந்துக்கொள்ளுதல்
- குழந்தை கூறுவதை முழுவதுமாக கேட்டல்
- குழந்தைக்கு ஏற்படும் பிரச்சனை குறித்து யாரிடம் புகார் அளிப்பது என்ற தகவல் அறிதல்
- பாதிக்கப்பட்ட குழந்தைக்கு மனதை ஆற்றுப்படுத்துதல் மற்றும் அதற்கான அமைப்புகளை ஊக்குவித்தல்
- பாதிக்கப்பட்ட குழந்தைகளின் மறுவாழ்வு செயல்களான கல்வி, மருத்துவம் போன்றவற்றை மேம்படுத்துதல்.
- குழந்தை பாதுகாப்பை குறித்த தகவல்களை களப்பணியாளர்களுக்கும் அரசு அலுவலர்களுக்கும் தெரியப்படுத்துதல்
- குழந்தை பாதுகாப்பிற்கு பொறுப்பான நபர்களின் செயல்திறனை வளர்த்தல் மற்றும் ஊக்குவித்தல்
- குழந்தை பாதுகாப்பை குறித்த களப்பணி ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்




B. Kiruthika
*IX B, Annamalaiar Mills Girls Hr. Sec. School, Dindigul.*

பிரிவு - 4

# குழந்தை பாதுகாப்பும் இன்றைய சூழலும்

குழந்தை பாதுகாப்பு என்பது பலவிதமாக புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறது. குழந்தை உரிமைகள் சாசனத்திலும் தனி விதிகளாக குழந்தை பாதுகாப்பு குறித்த கருத்துக்கள் உள்ளன. இருப்பினும் தற்போது உள்ள சூழலில் குழந்தை பாதுகாப்பு என்பதை தனித்தீவாக கருத முடியாது. மனித சமுதாயத்தில் பலதரப்பட்ட நிலைகளிலும் குழந்தை பாதுகாப்பு குறித்த ஒரு விழிப்புணர்ச்சி ஏற்படுத்த வேண்டியது அவசியமாக இருக்கிறது. தனிநபரை இணைத்து மட்டும் குழந்தை பாதுகாப்பு குறித்து பேச இயலாது.

1. குழந்தை உரிமை சாசனம் வெளியிடப்பட்டு 30 ஆண்டுகளுக்கும் மேலாகிவிட்டது. இன்னும் குழந்தை பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுவிட்டதா என்பது ஒரு கேள்விக் குறியாகவே இருக்கிறது. ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு அனுப்பப்படும் குழந்தைகள், போர்கள், பெருகிவரும் நுகர்வோர் கலாச்சாரம், கணினி மயமாக்கப்பட்ட சூழல் அதன் மூலம் வளர்ந்து வரும் பாலியல் துன்புறுத்தல்கள், புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட நோய்கள் என்று பலவிதமான சவால்களை இந்த உலகம் சந்தித்து வருகின்றது. இத்தகைய சூழலில் குழந்தைகளைத் தனிமைப்படுத்தி பாதுகாத்தல் என்பது இயலாத காரியம். எனவே அனைத்து துறைகளும் இணைந்துதான் குழந்தையின் பாதுகாப்பை உறுதி செய்ய இயலும்.

2. குழந்தை பாதுகாப்பு என்பது இறுதியில் எந்தவிதமான அச்சுறுத்தல்களும் இல்லாத பாதுகாப்பான சூழலை குறிக்கும். பாதுகாப்பற்ற சூழல்களில் உள்ள குழந்தைகளுக்கு, தாக்குதல் ஒருபுறம் இருந்தாலும் அவை நிகழாவண்ணம் தடுப்பது மிக முக்கியமாகிறது. வன்முறைக்கு உள்ளாகாமலும், உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் பாதிப்பு ஏற்படா வண்ணம் பாதுகாப்பு அளித்தல் மிக முக்கியமானது.

3. குழந்தை உரிமைகள் சாசனம் ஏற்றுக் கொண்ட பிறகு நமது கண்ணோட்டத்தில் ஒரு மாறுதல் ஏற்பட வேண்டும் என்பது அத்தியாவசியம். பாதிக்கப்பட்ட குழந்தைகளைக் கண்டுபிடிப்பதும் நாம் அவர்களுக்கு உதவி செய்வதும் தர்மத்தின் அடிப்படையில் அன்று. எப்பொழுது குழந்தைகளுக்கு உரிமைகள் உள்ளன என்று நாம் ஏற்றுக் கொண்டோமோ அப்பொழுதே குழந்தைகள் உரிமை உடையவர்களாக ஆகின்றார்கள். அவர்களுக்குத் தேவையான உரிமைகள் கிடைக்கப் பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கான கடமை உடையவர்களாக நாம் ஆகின்றோம். எனவே, அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்கள், ஆசிரியர், வழக்கறிஞர், காவல் துறையினர், மருத்துவர் போன்ற தொழில்ரீதியான வல்லுனர்கள், பெற்றோர், கிராம பஞ்சாயத்து உறுப்பினர்கள், ஆகிய அனைவருமே குழந்தைகளின் உரிமைகளை உறுதி செய்ய கடமைப்பட்டவர்களாகின்றனர்.


4. முற்றிலும் பாதுகாப்பான சூழலை எவ்வாறு உருவாக்குவது என்பதே பெரிய கேள்வியாக நம்மிடம் உள்ளது. ஏனெனில் பாதுகாப்பான சூழலை உருவாக்குவதற்கான இரண்டு அடிப்படை காரணிகள், ஒன்று தேவை மற்றொன்று சவால்களை சந்தித்தல் ஆகும்.

"வருமுன் காத்தலே சிறந்தது" என்ற பழமொழிக்கு இணங்க பாதுகாப்பு சூழலை அமைத்தலும் அதனை திறமையான தொழில் சார்ந்த வல்லுனர்களால் கண்காணித்தலும் அத்தியாவசியமானது. அதே நேரத்தில் பாதுகாப்பு வளையத்திலிருந்து வெளியே தள்ளப்பட்ட குழந்தைகள் அவர்கள் யாராக இருந்தாலும் (பெற்றோர் இல்லாத குழந்தைகள், சுரண்டலுக்கு ஆளான குழந்தைகள், குழந்தை தொழிலாளர், கடத்தலுக்குள்ளான குழந்தைகள், அனாதையாக்கப்பட்ட மற்றும் ஆதரவற்ற குழந்தைகள், பாலியல் ரீதியான துன்புறத்தலுக்கு ஆளான குழந்தைகள்...) அவர்களுக்கு பாதுகாப்பும், நல்வாழ்க்கையை அமைத்து கொடுத்தலும் இரண்டாவது முக்கிய பகுதியாக உள்ளது.


அ. ஒரு குடை எப்படி மழையிலிருந்தும், வெப்பத்திலிருந்தும் நம்மை பாதுகாக்கின்றதோ அது போல் நாம் குழந்தைகளை அனைத்து வன்முறைகளிலிருந்தும் (அச்சுறுத்தல், கொடுமைபடுத்துதல், சுரண்டல்,...) பாதுகாக்க வேண்டும். மழையில் நனைந்து கொண்டிருக்கும் குழந்தையைக் குடைக்குள் எப்படி வரவழைக்கின்றோமோ அதுபோல் கொடுமைக்குள்ளான குழந்தைகளைக் காப்பாற்றி பாதுகாப்பு என்ற குடைக்குள் வரவழைத்தல் அவசியமாகும். இதற்கு அனைவரும் இணைந்து செயல்பட்டால் மட்டுமே எல்லா குழந்தைகளையும் பாதுகாப்பு குடைக்குள் வரவழைக்க முடியும்.

இதை இன்னும் வேறு விதமாகவும் கற்பனை செய்து பார்க்க முடியும்.

ஆ. சர்க்கஸ் இறுதி கட்டத்தில் இருக்கும் பொழுது சர்க்கஸ் கோமாளிகள் உட்பட குறிப்பிட்ட சில பணியாளர்கள் மேலே தொங்கி கொண்டிருக்கும் ஊஞ்சல் போன்ற அமைப்புகளில் உட்கார்ந்து இருப்பதை காணலாம். காட்சிகள் தொடங்கியவுடன் ஒரு ஊஞ்சல் கம்பியிலிருந்து மற்றொரு ஊஞ்சல் கம்பிக்கு தாவி அதை பார்த்துக்கொண்டிருக்கும் காட்சியாளர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்துவார்கள். விதவிதமான வடிவங்கள் அமைப்பார்கள். இதற்கு நடுவே கோமாளிகள் மேலே ஏறி தாவ முயற்சிப்பார்கள். சில சமயம் தாவ முடியாமல் கீழே விழுவார்கள். கீழே அரங்கத்தின் நடுவில் ஒரு வலையை கட்டி இருப்பார்கள். கீழே விழும் கோமாளிகள் மற்றும் பணியாளர்கள் அடிபடாமல் இந்த வலை அவர்களை காப்பாற்றும். இந்த வலைதான் அவர்களின் பாதுகாப்பு வளையம் ஆகும். இந்த வலையில் ஓட்டைகள் இன்றி வலுவாக இருந்தால்தான் விழுபவர்களை பாதுகாக்க முடியும்.



இந்த வலைபோல குழந்தைகளின் பாதுகாப்பு உறுதியாக இருக்கவேண்டுமெனில் அனைத்து தரப்பினரும் எந்தவித தடையுமின்றி குழந்தைகள் முழுமையான வளர்ச்சி மற்றும் பாதுகாப்பு அடையவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் ஒருங்கிணைந்து செயல்படுவது அவசியம் ஆகும்.



D. Sabarish
*10th, K.V., Avadi*

பிரிவு - 5

# குழந்தை பாதுகாப்பை உறுதி செய்யும் மைல்கற்கள்

பாதுகாப்பு வளையத்தின் முக்கியத்துவத்தை முன்பிரிவில் பார்த்தோம். இருப்பினும் உறுதியான பாதுகாப்பான சூழல் குழந்தைகளுக்கு இன்றும் கிடைக்காமல் இருக்கிறது. பல குழந்தைகள் சமுதயாத்தில் விளிம்பு நிலைகளில் பாதுகாப்பற்று, வளர்ச்சி பாதிக்கப்பட்ட சூழலில் இருக்கிறார்கள்.

குடும்ப சூழலின் வறுமை, நிதி ஆதாரமின்மை போன்ற காரணங்கள் குழந்தைகள் பாதுகாப்பிற்கு மிகப்பெரிய தடையாக உள்ளன. உதாரணமாக திருநெல்வேலியில் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் அனைவரின் முன்பாகவே குழந்தைகள் உட்பட குடும்பத்தார் அனைவரும் தீயிட்டு பலியான செய்தி அனைவரையும் நடுங்க வைத்தது. குழந்தைகளின் பாதுகாப்பு பல சமூக பொருளாதார காரணிகளுடன் வெகுவாக சம்மந்தப்பட்டிருக்கின்றன என்பது இதுபோன்ற நிகழ்வுகளால் வெளிச்சத்திற்கு வருகின்றன.



குழந்தை பாதுகாப்பில் தொய்வு ஏற்படுவதற்கான காரணம்:

1. வலுவான சட்டம் மற்றும் கண்காணிப்பு இல்லாமை
2. சில சட்டங்கள் இருந்தும் செயல்படுத்துவதில் தடைகள்
3. சட்டங்கள் இருக்கின்றன. அமைப்புகள் இருக்கின்றன - செயல்பாட்டில் இல்லை
4. மக்களிடையே போதிய விழிப்புணர்வு இல்லாமை
5. கலாச்சாரம் மற்றும் பழக்க வழக்கங்கள்

குழந்தையின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கான அடிப்படை காரணிகளை ஆராய்ந்து அவற்றை நீக்குவதற்கு முயற்சி செய்தல் அவசியம்.

## 5.1 பாதுகாப்பு உரிமைகளை நிறைவேற்றுவதில் அரசாங்கத்தின் பங்கு:-

முதலாவதாக அரசாங்கம் குழந்தை பாதுகாப்பிற்கு எத்தனை முக்கியத்துவம் தருகிறது என்று அலச வேண்டும். வறுமை ஒழிப்பு, முன்னேற்றம், பாரபட்சமின்மை போன்ற அடிப்படையான கூறுகளையும் அரசு எவ்விதம் பார்க்கிறது என்றும், அரசு திட்டத்தில் இரண்டு நிலைகளான குழந்தை பாதுகாப்பிற்கும், பாதிப்புக்குள்ளான குழந்தைகளின் மறுவாழ்விற்கும் சமமான பங்கு அளிக்கப்படுகின்றதா என்பது ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும்.

நடைமுறையில் உள்ள சமூக நலத்திட்டங்கள், மானிய ஒதுக்கீடு மற்றும் குழந்தை பாதுகாப்பில் பொது மக்களின் ஈடுபாடு போன்றவை மூலம் அரசாங்கம் குழந்தை பாதுகாப்பிற்கு எந்தளவிற்கு கவனம் செலுத்துகிறது என்பது தெரிய வரும். நாட்டில் உள்ள குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பிற்கு அடித்தள சூழ்நிலையை ஏற்படுத்தி தருவது அரசாங்கத்தின் முக்கிய பொறுப்பு ஆகும்.

1992ம் வருடம் இந்திய அரசாங்கம் குழந்தை உரிமைகள் சாசனத்தை ஏற்றுக் கொண்ட பின்னர் 2000ம் வருடம் குழந்தை உரிமைகள் சார்ந்த சிறப்பான இரண்டு நெறிமுறைகளை ஐ.நா. சபை வெளியிட்டுள்ளது. இந்த இரண்டு நெரிமுறைகளையும் இந்திய அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது.

1. போர்காலங்களில் 18 வயது நிரம்பாத குழந்தைகளை ஈடுபடுத்தாமல் இருப்பது.
2. குழந்தை விற்பனை, குழந்தை விபச்சாரம் மற்றும் குழந்தையை ஆபாசமாக சித்தரித்தல் ஆகியவற்றைத் தடை செய்வது மற்றும் தடைசெய்வதற்கான செயல்பாடுகளுக்கு உத்தரவாதம் அளித்தல்.

2009-ம் வருடம் புதிதாக ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்பு திட்டம் (Integrated Child Protection Scheme - ICPS) மத்திய அரசின் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறையின் மூலம் கொண்டுவரப்பட்டது. இது மிக முக்கியமான ஒரு செயலாக்க திட்டம். இதன் மூலம் இந்தியாவில் ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்பிற்காக ஒரு தனிப்பட்ட அமைப்பு உருவாக்கப்பட்டது. இத்திட்டம் குழந்தைகளுக்கான பாதுகாப்பு அமைப்பை கிராம அளவிலிருந்து மத்திய அரசு வரை ஏற்படுத்தியுள்ளது. இருப்பினும் இத்திட்டத்தில் ஆக்கப்பூர்வமான முன்னேற்றங்கள் கொண்டு வரவேண்டும் என்பதன் அடிப்படையில் குழந்தை பாதுகாப்பிற்கு அரசாங்கத்தால் எல்லா மாவட்டங்களிலும் குழந்தை பாதுகாப்பு அலகு (District Child Protection Unit - DCPU) என்ற ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அமைப்பின் மூலம் இளைஞர் நீதிச் (பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் சரிவர செயல்படுத்தப்படுகிறதா என்பதை கண்காணிப்பது மட்டுமல்லாமல் மற்ற துறைகளுடன் ஒருங்கிணைந்து மாநில, மாவட்டம் மற்றும் கிராம அளவில் குழந்தை பாதுகாப்பிற்கான பணிகளை உறுதி செய்வதும் ஆகும்.

## 5.2 சட்டமும் நடைமுறையும் :-

சட்டரீதியாக குழந்தை பாதுகாப்பிற்கான பல சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன என்பதை மறுக்க இயலாது. சட்டங்களை நடைமுறைப்படுத்தும் தன்மையும், பொறுப்பாளிகளை திட்டவட்டமாக குறிப்பிடுவதும், சட்டதிட்டங்களுக்கு கீழ்படிந்து நடக்க வேண்டிய மனோபாவம் மக்களிடையே இருப்பது அவசியமாகும். இதன் மூலம் குழந்தை பாதுகாப்பை உத்தரவாதப்படுத்த இயலும்.

இந்திய அரசியல் சாசனத்தில் குழந்தை பாதுகாப்பை உறுதிப்படுத்தக்கூடிய ஷரத்துகள் (விதிகள்) உள்ளன.

- 14 வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் இலவச கட்டாய கல்வி பெறுவதற்கான உரிமை - ஷரத்து எண் 21A
- 14 வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளும் வேலை செய்வதிலிருந்து பாதுகாத்தல் - ஷரத்து எண் 24
- வன்முறையிலிருந்து பாதுகாக்கப்படுவதற்கும், அவர்களுடைய வயதிற்கு ஒவ்வாத வேலைவாய்ப்புகளிலிருந்து தடுத்தல் - ஷரத்து எண் 39E
- குழந்தை பருவத்தில் சுரண்டப்படுவதிலிருந்தும், எல்லாவிதமான பொருளாதார தர்மத்திற்கு புறம்பான செயலிலிருந்து பாதுகாக்கபடுதல் மற்றும் ஆரோக்கியத்துடனும், சுதந்திரத்துடனும், மனித மாண்போடு வாழ்வதற்கும், காக்கப்படுவதற்கும் சமஉரிமை உண்டு - ஷரத்து எண் 39F
- ஆறு வயதிற்குட்டபட்ட எல்லா குழந்தைகளுக்கும் செழுமையான குழந்தை பராமரிப்பு மற்றும் முன் ஆரம்ப கல்வி பெறுவதற்கான உரிமை - ஷரத்து எண் 45

இந்தியாவில் குழந்தை பாதுகாப்பிற்கென பல சட்டங்கள் உள்ளன. 2015ம் ஆண்டு மாற்றி அமைக்கப்பட்ட இளைஞர் நீதிச் (குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் மிக முக்கியமான சட்டமாக கருதப்படுகிறது. இச்சட்டத்தின் படி குழந்தைகளை இரண்டு விதமாக (பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகள், சட்டத்திற்கு புறம்பான செயல்களில் ஈடுபட்டதாகக் கருதப்படும் குழந்தைகள்) பிரித்து அவர்களின் மறுவாழ்விற்காக பலவிதமான சட்ட அமைப்புகளை நடைமுறைக்கு கொண்டுவந்துள்ளது. இச்சட்டத்தின்படி 18 வயது பூர்த்தியாகும் வரை அவர்களை குழந்தைகளாக கருதவேண்டும் என்பது மிக முக்கியமான அம்சமாகும். இது குறித்து ஒரு சில கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. இச்சட்டத்தில் குழந்தை 18 வயது வரை என கூறியிருந்தாலும் குழந்தை திருமண தடைச் சட்டத்திலும், குழந்தை தொழிலாளர் (தடுப்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டத்திலும் குழந்தையின் வயது வேறாக வரையறுக்கப்பட்டுள்ளது. இளைஞர் நீதி சட்டம், 2015ல் கொடுக்கப்பட்டுள்ள வயது வரம்பை மற்ற சட்டங்களிலும் கொண்டுவரவேண்டும். இதுபோல சட்டங்களுக்கிடையே இருக்கக்கூடிய முரண்பாடுகளை களைதல் முக்கியம்.

எல்லா சட்டங்களிலும் குழந்தை வயது, குழந்தை என்றால் என்ன என்ற வரையறையை ஒரே சீராக நிர்ணயிக்கப்பட வேண்டும். உதாரணமாக கீழே காண்பிக்கப்பட்டுள்ள சட்டங்களில் வயது வேறுபாடுகள் உள்ளன.


| வ.எண். | சட்டங்கள் | வயது |
|---|---|---|
| 1. | இந்திய பெரும்பான்மையான சட்டம் (Indian Majortiy Act) | 18 வயது வரை |
| 2. | இளைஞர் நீதிச் (குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் | 18 வயது வரை |
| 3. | குழந்தைத் திருமண தடைச் சட்டம் | பெண் குழந்தை – 18 வயது<br>ஆண் குழந்தை – 21 வயது |
| 4. | குழந்தைகளுக்கான இலவச கட்டாய கல்வி சட்டம் | 14 வயது வரை |
| 5. | குழந்தைத் தொழிலாளர் (தடுப்பு மற்றும் முறைப்படுத்துதல்) திருத்தப்பட்ட சட்டம் | 14 வயது வரை – தடை செய்யப்பட்டுள்ளது<br>18 வயது வரை – முறைப்படுத்தப்பட்டுள்ளது |
| 6. | பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம் | 18 வயது வரை |



சட்டங்களில் வயதை நிர்ணயப்படுத்திய பிறகு சட்டரீதியான பாதுகாப்பு என்பது உறுதிப்படுத்த வேண்டுமேயானால் இச்சட்டங்கள் நடைமுறையில் எவ்வாறு செயல்படுகின்றன, என்றும், இச்சட்டங்களை செயல்படுத்தும்பொழுது என்னனென்ன பின்விளைவுகள் ஏற்படுகின்றன என்பதையும் குறிப்பாக பார்க்க வேண்டும்.

குழந்தைத் திருமண தடைச் சட்டம் நடைமுறைப்படுத்தும்பொழுது என்னென்ன பிரச்சனைகள் ஏற்படுகின்றன என்றும், குழந்தைத் திருமணத்திற்கான சமூக காரணிகளை ஆராயாமல் இருப்பதாலும், அதற்கேற்ற யுக்திகளை கொண்டு வராமல் இருப்பதாலும், தக்க நடவடிக்கைகள் ஏற்படுத்தாமல் இருப்பதாலும் குழந்தைத் திருமணத்தை தடுக்க இயலாத நிலையாக உள்ளது.

இதுபோலவே பிற சட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதில் பிரச்சனைகள் உள்ளன. இது குழந்தை பாதுகாப்பிற்கு ஒரு தடையாக உள்ளது. குழந்தைகளை மையப்படுத்தி ஏற்படுத்தும் சட்டங்கள், சட்டரீதியாக அதற்கென எழுப்பப்படும் அமைப்புகள், சட்டங்கள் குறித்த விழிப்புணர்வு, விதிமீறுபவர்களை சட்டரீதியாக தண்டனைக்கு உள்ளாக்குதல் என்ற நான்கு நிலைகளிலும் நாம் இதை அணுக வேண்டும். விரைவாக குழந்தையின் நலனை கருத்தில் வைத்து சட்டங்களை மீறுபவர்களுக்கு உரிய தண்டனை அளிக்கப்பட வேண்டும். அனைத்து நிலையிலும் முறையான வலிமையான அரசு அமைப்புகள் இருந்தாலன்றி சட்டரீதியாக குழந்தையின் பாதுகாப்பை சரிவர செய்ய இயலாது.




## 5.3 மனோபாவம், பழக்க வழக்கம், கலாச்சார மரபுகள் :-

குழந்தைகளுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய ஒரு சில செயல்பாடுகள் பழக்க வழக்கமாக சமூக கலாச்சாரத்தின் அடிப்படையில் நடைபெற்று வருகிறது. இது குழந்தை உரிமை மீறல்களாக இருந்தாலும் மக்களிடையே கலாச்சார பழக்கமாக இருப்பதால் அனைவராலும் இது ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

குழந்தைக்கு சூடுபோடுதல், குழந்தையை மண்ணில் புதைத்தல் (குழி பாப்பா), அலகு குத்துதல் போன்ற பழக்கவழக்கங்கள் குழந்தையை பாதிக்கக் கூடியதாயினும் மதரீதியாகவும், கலாச்சாரரீதியாகவும் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இவற்றை மாற்றுவது கடினமாக உள்ளது. குழந்தைக்கு தண்டனைகள் தருவது, உடல் ரீதியான தீங்கை ஏற்படுத்துவது போன்றவை குழந்தையை ஒழுங்குப்படுத்தும் முறைகளாக நடைமுறையில் உள்ளது. கருக்கலைத்தல், குழந்தை திருமணம் போன்றவை ஆண் ஆதிக்க சிந்தனையை வெளிப்படுத்துவதாக உள்ளன. இவற்றை மாற்றுவது மிக கடினமானதே. இச்சிந்தனைகளை மாற்றுவதற்கு சட்டரீதியாக நடவடிக்கை எடுப்பது இயலாத ஒன்றாகும். தீவிர விழிப்புணர்வு மற்றும் பயிற்சி போன்றவற்றின் மூலமாகவே இச்சிந்தனைகளை மாற்ற இயலும்.

## 5.4 ஊடகம் (மக்கள் தொடர்பு சாதனம்) மற்றும் சமுதாய கட்டமைப்புகள் உள்ளடங்கிய கலந்தாய்வு :-

மக்கள் தொடர்பு சாதனங்கள் மூலமாகவும், சமுதாய கட்டமைப்புகள் மூலமாகவும், குழந்தை பாதுகாப்பு குறித்த கருத்துக்களை நேர்மறையாக விவாதம் செய்வதும், ஆராய்ச்சிகள் மேற்கொள்வதும், சான்று ஆதாரங்களை உருவாக்குவதும் அவசியமானதாகும். தற்சமயம் அரசாங்கத்தின் ஒத்துழைப்பை பெறுவதில் சில தடைகள் உள்ளன. குழந்தை பாதுகாப்பு குறித்து மக்களிடையே தற்பொழுது போதுமான விழிப்புணர்வு இல்லை. குழந்தைகள் பாதுகாப்பிற்குள்ளானவர் என எண்ணுகின்றோமே தவிர குழந்தை பாதுகாப்பு என்பது அனைவரின் கடமை என்பதை முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை. குழந்தை பாதுகாப்புக்குப் பொறுப்பான நபர்கள் அனைவரும், எல்லா தகவல் தளங்களிலும் குழந்தை பாதுகாப்பு குறித்த கருத்துக்களை

வெளிப்படையாக கலந்துரையாடும் வாய்ப்புகளை ஏற்படுத்துவது, குழந்தை பாதுகாப்பை உறுதி செய்வதற்கான அத்தியாவசியமான முன்னேற்பாடுகளில் ஒன்றாகும்.

## 5.5 குழந்தைகளுக்கான வாழ்வியல் திறன்கள், அறிவாற்றல் திறன் மற்றும் பங்கேற்பு :-

குழந்தை பாதுகாப்பை பொறுத்தவரை குழந்தைகள்தான் (ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும்) முக்கிய பங்கு வகிக்க வேண்டும். எனவே பாதுகாப்பு உரிமைகள் குறித்தும், குழந்தை பாதுகாப்பில் ஏற்படக் கூடிய தடைகள் குறித்தும், இக்கட்டான சூழ்நிலை ஏற்படும்பொழுது எவ்வித முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்றும் குழந்தைகளுக்கு தெரிந்திருக்க வேண்டும். அதன் மூலமாகத்தான் அச்சுறுத்தல்களை தவிர்த்து குழந்தைகள் பாதுகாப்பாக இருக்க முடியும்.



பங்கேற்றல் குழந்தைகளுக்கு அத்தியாவசியமான ஒரு வழிகாட்டி ஆகும். ஆனால் அவர்களுக்குரிய சந்தர்ப்பம் முழுமையாக பெரியவர்களால் தரப்படுவதில்லை. பெரும்பாலான நேரங்களில் பெரியவர்களின் கருத்துக்களையே குழந்தைகள் ஏற்றுக்கொள்ளக்கூடிய சூழ்நிலையில் உள்ளனர். அவர்கள் சிந்திக்கவும், கருத்துக்களை வெளிப்படுத்துவதற்குத் தேவையான சந்தர்ப்பங்களையும் அமைத்து கொடுப்பதில்லை. வளரிளம் பருவத்தினருக்கான சங்கங்கள், குழந்தைகள் நாடாளுமன்றம், குழந்தை செய்தி தொடர்பாளர்கள் போன்ற அமைப்பாளர்களை பலப்படுத்தி குழந்தைகளின் கருத்துக்களை வெளிப்படுத்த வாய்ப்பு அளிக்க வேண்டும். குழந்தைகளுடைய உரிமைகள் மறுக்கப்படும்போது, எவ்வாறு, யாரை தொடர்பு கொள்ள வேண்டும் என்பது போன்ற அத்தியாவசிய தகவல்கள் குழந்தைகளுக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

## 5.6 குழந்தைகளோடு வேலை செய்பவர்களின் திறன்களை வளர்த்தல் :-

பெற்றோர் தமது குழந்தைகளை அன்போடு பராமரிக்கிறார்கள், பாதுகாக்கிறார்கள், தங்களைவிட குழந்தைகள் சீரிய வாழ்க்கை வாழ வேண்டும் என்று நினைக்கிறார்கள். ஆயினும் அனைவருக்கும் இதை உறுதி செய்வதற்கான சமூக பொருளாதார சூழல் இருப்பது இல்லை. சிலநேரங்களில் இது குறித்து அவர்களுக்கே தெரிந்திருப்பதில்லை.

குடும்ப உறுப்பினர்கள், சமூக சேவகர்கள், ஆசிரியர்கள், சமூக அலுவலர்கள், அரசாங்க பணியாளர்கள், பஞ்சாயத்து உறுப்பினர்கள், காவல்துறையினர் என அனைவருக்கும் குழந்தைகளை பாதுகாப்பதற்கும், சிறந்த முறையில் வளர்ப்பதற்கும் தேவையான திறன்களை மேம்படுத்துவது, ஊக்கப்படுத்துவது மற்றும் உறுதுணையாக இருப்பது அவசியம். குழந்தைகளிடையே ஒழுக்கத்தையும், வாழ்க்கைக்குத் தேவையான திறன்களையும் எவ்வாறு மேம்படுத்துவது என்பது பலருக்கும் தெரிவது இல்லை. சில நேரங்களில் குடும்பங்களிலேயே குழந்தை பாதுகாப்பு என்பது அச்சுறுத்துலாக உள்ளது. இந்நிலையில் குழந்தைகளை குடும்பங்களிலிருந்து அப்புறப்படுத்த வேண்டிய சூழல் ஏற்படுகின்றது. இம்மாதிரியான சூழல்களுக்கேற்ப பாதுகாப்பு இடங்களை உருவாக்குவது அரசின் கடமையாகும். குழந்தையை வீட்டிலேயே பராமரிப்பதற்கான ஊக்கத்தொகை, அவர்கள் வாழும் இடங்களில் பாதுகாப்பிற்கான வசதிகள், குடும்பங்களுக்கு பொருளாதார உதவி, மக்களுக்கான சமூக நலத் திட்டங்கள் போன்றவை முழுமையாக செயல்படுத்துவதன்மூலம் குழந்தை பாதுகாப்பினை உறுதி செய்யலாம்.

ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்பு திட்டம் குழந்தைகளை மையப்படுத்தி ஒரு வரையறுக்கத் தகுந்த செயல் திட்டமாக உள்ளது. இத்திட்டத்தின் மூலம் குழந்தை நலனில் அக்கறை கொண்டுள்ள அனைத்து அரசு துறை மற்றும் சமூக பிரதிநிதிகளை ஒருங்கிணைக்கக் கூடிய வசதியை ஏற்படுத்தி உள்ளது. ஒருங்கிணைந்த

குழந்தை பாதுகாப்பு என்பது கிராம அளவிலான கண்காணிப்பு குழுக்களை பலம் வாய்ந்தவையாக மாற்றுவதாலேயே எல்லா குழந்தைகளுக்கும் பாதுகாப்பான சூழலை ஏற்படுத்தி தர முடியும்.

## 5.7 அடிப்படையான தேவைகள் :-

எல்லோருக்கும் பொதுவாக அமைந்த சமூக சேவைகள், ஆரோக்கியம் மற்றும் கல்வி போன்ற முக்கிய தேவைகள் அனைத்தும் எந்த தடைகள் இன்றியும், பாரபட்சமின்றியும் அனைவரையும் சென்றடைய செய்ய வேண்டும். குறிப்பாக வன்முறை, சுரண்டல், குழந்தைகளுக்கு எதிரான துன்புறு சூழல்கள் போன்றவற்றிலிருந்து காப்பாற்றவும், அவர்கள் முழுவளர்ச்சி அடைவதற்கு தேவையான பராமரிப்பையும் உறுதி செய்யவேண்டும்.

இந்தியாவில் சமூக ஒருங்கிணைப்பிற்கும், குழந்தைகள் பாதுகாப்பிற்கும் எதிராக சில முக்கிய காரணிகள் உள்ளன. சாதி, பாலினம், பொருளாதார வேறுபாடுகள், மற்றும் வாழும் சூழல் ஆகியவற்றின் அடிப்படையில் சமுதாயம் பிளவுபட்டிருக்கிறது. அனைவருக்கும் எல்லா தேவைகளும் ஒரே மாதிரியாக கிடைப்பதில்லை. அனைவரையும் சமூகரீதியாக ஒன்றிணைக்கும் திட்டங்கள் முழுமையாக செயல்படாத காரணத்தினால், இன்னும் பல குழந்தைகள், பாதுகாப்பு வளையத்திற்கு வெளியில் இருப்பதை பார்க்கிறோம். வன்முறை, சுரண்டல், கொடுமைப்படுத்துதல் போன்றவை பெரும்பாலும் அடித்தட்டு மக்களிடையே நடப்பதை பார்க்கிறோம். பாதுகாப்பின்றி பல குழந்தைகள் கொடுமைக்கு உள்ளாகி இருக்கிறார்கள். கடத்தலுக்கு உள்ளாகி குடும்பத்தை பிரிந்து இருக்கிறார்கள், அடிமையாக வேலை செய்கிறார்கள், இவர்களை மீட்பதற்கும் சமுதாயத்தில் ஒருங்கிணைப்பதற்கும், அவர்களின் மறுவாழ்விற்கான திட்டங்கள், அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டிருந்தும் அதற்குண்டான பலன் குழந்தைகளை சென்று சேராமல் இருப்பதை பார்க்கிறோம்.

ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்பு திட்டத்தின் கீழ் இவ்வாறான நிலைமை மாறுபடுவதற்கான சூழல் ஏற்படலாம். குடும்பங்களை மையப்படுத்திய செயல்திட்டங்கள் தேவை. குழந்தைகள் இல்லங்களில் சேர்த்து பராமரிப்பதே தற்போது நடைமுறையில் உள்ள திட்டமாக உள்ளது. இந்நிலைமை மாற வேண்டும். அதே போல சமுதாய கிளர்ச்சிகள் அல்லது வன்முறையால் பாதிக்கப்பட்ட குழந்தைகளையும் தனி கவனத்துடன் பார்க்க வேண்டியது அத்தியாவசியமாகிறது. அனைத்து குழந்தைகளுக்கும் பாதுகாப்பான சூழலை உறுதி செய்யப்படவேண்டியது மிக முக்கியமானதாகும்.

## 5.8 கண்காணித்தல் :-

சிறந்த முறையில் தகவல்களை சேகரித்தல், தகவல்களின் முறைகளை கண்காணித்தல், குழந்தைகள் குறித்த ஆராய்ச்சியில் ஈடுபடுதல், மதிப்பீடு செய்தல் போன்ற செயல்பாடுகள் மூலம் குழந்தை பாதுகாப்பை உறுதி செய்யலாம். இதன் காரணமாகவே ஐ.நா சபை குழந்தை உரிமைகள் சாசனத்தில் கண்காணித்தல் குறித்து தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த உடன்படிக்கையை ஏற்றுக்கொண்ட அனைத்து நாடுகளும் கையொப்பமிட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டுகள் கடந்த பின் அந்த நாட்டின் அரசு மேற்கொண்ட நடவடிக்கை பற்றியும், குழந்தை உரிமைகள் எவ்வாறு கடைபிடிக்கப்பட்டுள்ளது என்ற அறிக்கையையும் இதற்காக அமைக்கப்பட்ட கண்காணிப்பு குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதன்பிறகு ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை தொடர்ந்து இந்த அறிக்கையை கட்டாயமாக அனுப்ப வேண்டும் என்பதை ஐ.நா. சபை வலியுறுத்தியுள்ளது. இதுமட்டுமல்லாது அந்த நாட்டில் உள்ள தன்னார்வ தொண்டு நிறுவனம் / கல்வி நிறுவனம் போன்ற தனியார் அமைப்புகளும், குழந்தை உரிமைகள் குறித்த மாற்று அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என்று ஐ.நா சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

திட்டம் நல்ல முறையில் செயல்படுவதற்கு கண்காணிப்பு மிக அவசியமாகும். தொடர் கண்காணிப்பின் அவசியத்தை உறுதி செய்வதற்காகவே குழந்தைகளின் பாதுகாப்பு குறித்த தொடர் அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டும் என்பதை ஐ.நா. சபை வலியுறுத்தியுள்ளது.



## 5.9 தகவல் தரவுகள்:

தகவல் தரவுகள் குழந்தை பாதுகாப்பிற்கு மிக முக்கியமான அடிப்படை அம்சம் ஆகும். குழந்தை தொழிலாளர்கள் அல்லது ஒப்பந்த அடிப்படையில் வேலைக்கு அனுப்பப்படுதல் அல்லது கடத்தப்படுதல் போன்ற குழந்தை பாதுகாப்பு உரிமை மீறல்கள் குறித்த எந்த ஒரு மறுவாழ்வு செயல் திட்டத்திற்கும் புள்ளி விவரங்கள்தான் அடிப்படையாக இருக்க முடியும்.

தற்போது இந்தியாவில் தகவல் தரவுகள் போதுமானதாக இல்லாததை பார்க்கிறோம். குழந்தை பாதுகாப்பு குறித்த அடிப்படை தரவுகள் முறையாக கிடைப்பது இல்லை. தற்போதுள்ள மக்கள் கணக்கெடுப்பு (Census), தேசிய குடும்ப சுகாதார கணக்கெடுப்பு (National Family Health Survey-NFHS) போன்றவற்றின் மூலமாக ஓரளவிற்கு தேவையான தகவல்களை தெரிந்துக் கொள்ள இயலுகிறது. குறிப்பாக குழந்தை பிறப்பு-இறப்பு விகிதம், பெண் குழந்தைகள் குறித்த தகவல், பள்ளியில் சேர்த்தல், இடைவிலகல் போன்ற சில விவரங்கள் மட்டுமே முறையாக சேர்க்கப்பட்டுள்ளன. அரசு தகவல்களுக்கும், தனியார் மேற்கொள்ளும் ஆராய்ச்சியின் முடிவுகளும் பெரும்பாலும் ஒன்றாக இருப்பதில்லை. அரசு தகவல்களானது ஒன்று, நிலைப்பாட்டை விட மிக குறைந்ததாகவோ அல்லது மிக அதிகமாகவோ உள்ளன. இதன் அடிப்படையில் செயல்திட்டங்களை உருவாக்குவது கடினமான ஒன்றாக உள்ளது. முழுமையான பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டுமெனில் அடிப்படையில் உண்மையான புள்ளி விவரங்கள் தேவை. இந்த புள்ளிவிவரங்கள் அறிவியல்ரீதியாக அனைவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவும், உண்மை நிலவரத்தை பிரதிபலிக்கக்கூடியதாகவும் இருக்க வேண்டும். அரசு சார்ந்த விவரங்கள், தனி நபர் ஆராய்ச்சிகள் இரண்டும் ஓரளவிற்கேனும் ஒன்றாக இருக்க வேண்டும்.

களத்தில் உள்ள நிலவரங்களின் அடிப்படையில் தயாரிக்கப்படும் உண்மை சம்பவக் கோப்புகள், ஆய்வறிக்கைகள் போன்றவை குழந்தைகளின் பாதுகாப்பை உறுதிபடுத்துவதற்கான சிறந்த கருவி ஆகும்.

## 5.10 குழந்தை பாதுகாப்பிற்கான சூழ்நிலையை உருவாக்குதல்:

- ஆண் மற்றும் பெண் குழந்தைகளுக்கு ஏற்படுகின்ற வன்முறை, சுரண்டல் மற்றும் தேவையின்றி குடும்பத்திலிருந்து குழந்தையை பிரித்தல் போன்ற பல ஆபத்துகளிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கப்பட வேண்டிய சூழ்நிலையை உருவாக்குதல்.
- குழந்தை பாதுகாப்பிற்கான சட்டங்கள், செயல்திட்டங்கள், அணுகுமுறைகள், ஆகியவை கண்டறியப்பட்டு நடைமுறைக்கு கொண்டுவருவதன் மூலமாக பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலையிலிருந்தும், நமக்கு ஏற்கனவே தெரிந்த அபாயங்களிலிருந்தும் குழந்தைகளை காப்பற்றுவது, குழந்தைகளுக்கு எதிரான வன்முறை செயல்களை குறைப்பது மற்றும் குழந்தைகள் இச்சூழலிலிருந்து மீண்டுவந்து இயல்பான நிலையில் இருப்பதற்கான ஆற்றலை பலப்படுத்துதல் போன்றவற்றை செயல்படுத்த இயலும்.

## 5.11 குழந்தை பாதுகாப்பை உறுதி செய்வதற்கான வழிமுறைகள்

- சமூக நலம் / பாதுகாப்பு, கல்வி, சுகாதாரம், காவல், பொதுப்பணி, வருவாய் போன்ற துறைகளுடன், தன்னார்வ தொண்டு நிறுவனம் ஒருங்கிணைந்து செயல்படுதல்
- பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கும் தனிக் கவனம் தேவை; அவர்களுடைய மறுவாழ்விற்கும், மனரீதியான பாதுகாப்பிலிருந்து மீண்டு வருவதற்கும் சிறப்பு கவனம் மற்றும் திட்டங்கள் தேவை.
- "வருமுன் காத்தலே சிறந்தது", இதன் அடிப்படையில் அனைத்து குழந்தைகளுக்கும் பாதுகாப்பை உறுதி செய்வதற்குரிய நிர்வாக அமைப்புகளையும், செயல்திட்டங்களையும் உருவாக்குவது அத்தியாவசியம். குழந்தைகளின் ஆரோக்கியம், மனநலம் ஆகிய இரண்டிலும் கவனம் செலுத்துதல்

வேண்டும். பாதுகாப்பு முயற்சிகள் அதிகரிக்கும் பொழுது குழந்தைகள் பிரச்சனைக்கு உள்ளான சூழல்களில் சிக்கிக் கொள்வதை தவிர்க்கலாம். அதனாலேயே திறன்வாய்ந்த குறிப்பிட்ட சூழலில் வேலை செய்வதற்கு பயிற்சி பெற்ற பணியாளர்களை உருவாக்குவது மற்றும் மனித வளத்தை மேம்படுத்துவது அத்தியாவசியமானது ஆகும்.

- குழந்தை பாதுகாப்பில் பங்கேற்கும் அனைவரும் முழு ஈடுபாட்டுடனும், தகுந்த கல்வித் தகுதியும், செய்திறனும் பெற்றவர்களாக இருத்தல் அவசியம். மேலும் அவர்களுக்கு குழந்தை பாதுகாப்பிற்கு தேவையான திறமைகளை வளர்ப்பதற்கான பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும்.
- குழந்தைகள் பாதுகாப்பாக வளர்வதற்கான உரிமை உள்ளது; அது கிடைக்காத பொழுதெல்லாம் உரிமை மறுக்கப்பட்டதாக கருதி அவ்வுரிமை கிடைப்பதற்கான செயல்களை மேற்கொள்ள வேண்டும்.
- பாதுகாப்பற்ற சூழலில் குழந்தைகள் இருந்தால், அந்நாட்டிலிருக்கும் பொறுப்பானவர்களான அரசு, பெற்றோர், ஆசிரியர் போன்ற அனைவரும் தங்களுடைய கடமையை தவறாமல் செயல்படுத்துவதன் மூலம் குழந்தைகளுக்கு ஏற்படும் பாதுகாப்பற்ற சூழலை தடுக்க இயலும்.

இதைப் போல அரசு திட்டங்களையும் மறுபரிசீலனை செய்வது அவசியம். தற்பொழுது நடைமுறையில் உள்ள திட்டங்கள் எவ்வளவு தூரத்திற்குக் குழந்தை பாதுகாப்பை உறுதி செய்கிறது என்றும் புதிதாக குழந்தைகளை பாதிக்கக்கூடிய பிரச்சனைகள் எழுந்துள்ளதா என்றும் ஆராய்தல் அவசியமாகிறது.

## 5.12 குழந்தைகள் பாதுகாப்பிற்கான அரசு நலத் திட்டங்களில் சில:

தடுத்தல் மற்றும் பாதுகாத்தல் போன்றவற்றின் அடிப்படையில் அரசாங்கம் குழந்தைகளின் நலனை மேம்படுத்துவதற்கான திட்டங்களை கொண்டுவந்துள்ளது, அவற்றில் சில....

- தொட்டில் குழந்தை திட்டம்
- கல்வி பயிலும் குழந்தைகளுக்கான உதவித் திட்டங்கள் - புத்தகங்கள், சீருடை, காலணி, மிதி வண்டி, கணினி, மதிய உணவு, பேருந்து பயண அட்டை, உதவித் தொகை (மாற்றுத் திறனாளி குழந்தைகள்), ஊக்கத் தொகை போன்றவை
- பெண் குழந்தை பாதுகாப்பு திட்டம்
- பெண்குழந்தைகளை பாதுகாப்போம், பெண் குழந்தைகளுக்கு கல்வி அளிப்போம்.
- குழந்தைகளுக்கான பகல் நேர பராமரிப்பு மையம்
- செல்வ மகள் சிறு சேமிப்புத் திட்டம்
- சர்வ சிக்ஷா அபியான்
- மகப்பேறு நல உதவித் திட்டம்
- தேசிய ஊட்டச் சத்து குழுமம்
- குழந்தைகள் பராமரிப்பு இல்லம்
- குழந்தைகளுக்கான மாற்று பராமரிப்பு முறைகள் - குழந்தையைத் தத்தெடுத்தல், மாற்று குடும்ப முறை, நிதி ஆதாரம் வழங்குதல்
- சைல்டு லைன் 1098

பிரிவு - 6

# குழந்தைப் பாதுகாப்பிற்காக இயற்றப்பட்ட சட்டங்கள்

குழந்தைகளின் பாதுகாப்பிற்கும் அவர்களின் நலனிற்காகவும் இந்திய அரசாங்கம் சில சட்டங்களை ஏற்படுத்தி உள்ளது. மேலும் 1992ம் ஆண்டு ஐ.நா. உடன்படிக்கையில், இந்தியா கையெழுத்திட்டு ஏற்றுக்கொண்டதால் ஏற்கனவே உள்ள சில சட்டங்களை திருத்தி நடைமுறைபடுத்தியுள்ளது.

| குழந்தைகளுக்கு ஏற்படும் பிரச்சனைகள் / பாதுகாப்பின்மை | சட்டம் | அமைப்புகள் / செயல்பாடுகள் |
|---|---|---|
| பராமரிப்பு, பாதுகாப்பு மற்றும் குற்றம் புரிந்ததாகக் கருதப்படும் குழந்தைகள் | இளைஞர் நீதிச் (குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015 (Juvenile Justice (Care & Protection of Children) Act, 2015) | • மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு<br>• குழந்தை நல குழு<br>• இளைஞர் நீதி குழுமம்<br>• கிராம அளவிலான குழந்தை பாதுகாப்பு குழு |
| பாலியல் வன்கொடுமைக்குள்ளான குழந்தைகள் | பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம், 2012 (Protection of Children from Sexual Offences (POCSO) Act, 2012 | • குழந்தையின் நலனை முதன்மைபடுத்துதல் (நலனே பிரதானம்)<br>• சிறப்பு நீதி மன்றம்<br>• கடுமையான தண்டனைகள்<br>• பாதிக்கப்பட்ட குழந்தைக்கு இழப்பீடு தொகை வழங்குதல் - உடனடி / வழக்கு முடிந்தவுடன் |
| குழந்தைகளின் கல்லாமை | குழந்தைகளின் இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 (The Right of Children to Free and Compulsory Education Act,2009) | • 6 முதல் 14 வயது வரையுள்ள குழந்தைகள் அனைவருக்கும் கல்வி அளித்தல்<br>• குழந்தைகள் வசிக்கும் இடத்திற்கும் பள்ளிக்கும் தொலைதூரம் அதிக பட்சம் 3 கி.மீ. |

| | | |
|---|---|---|
| | | • தனியார் பள்ளிகளில் பின்தங்கிய குழந்தைகளுக்கு 25% இட ஒதுக்கீடு<br>• பள்ளி மேலாண்மைக் குழு |
| பெண் சிசுக் கொலை / கருக்கொலை | கருவின் நிலைப்பாட்டை கண்டறியும் நுணுக்க முறை (தவறாக பயன்படுத்துவதை கட்டுப்படுத்துதல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1994 (Pre-Natal Diagnostic Techniques (Regulation and Prevention of Misuse) Act, 1994) | • ஸ்கேன் மையங்களின் (Scan Centre) விதிமுறைகளை முறைப்படுத்துதல்<br>• கருவில் இருக்கும் குழந்தையின் வளர்ச்சியை மட்டுமே கண்காணித்தல்<br>• கருவில் இருக்கும் குழந்தையின் பாலினத்தை வெளியிடுவதை தடை செய்தல்<br>• கருக்கொலை செய்யாமல் தடுத்தல் |
| குழந்தைகள் கடத்தப்படுதல் | ஒழுக்க நெறி பிறழ்தல் சட்டம், 1956 (Immoral Traffic (Prevention) Act, 1956)<br>73 வது ஊராட்சி அமைப்பு திருத்தப்பட்ட சட்டம், 1992 | குழந்தைகள் கடத்தப்படுதல் கொத்தடிமை ஆக்கப்படுதலை தடுப்பதற்கான கண்காணிப்பு முறை<br>• மூன்றடுக்கு ஊராட்சி முறை (கிராமம், வட்டாரம், மாவட்டம்)<br>• கிராம சபை அமைப்பு<br>• கிராம அளவிலான குழந்தை பாதுகாப்பு குழு |
| குழந்தைகளை வேலையில் அமர்த்துதல் | குழந்தைத் தொழிலாளர் (தடுப்பு மற்றும் முறைப்படுத்துதல்) திருத்தப்பட்ட சட்டம், 2016 (Child Labour (Prohibition & Regulation) Amendment Act, 2016) | • 14 வயது நிரம்பாத குழந்தைகள் முழு அல்லது பகுதி நேர வேலையில் அமர்த்துவதை தடை செய்கிறது.<br>• 15 - 18 வயது இருக்கக்கூடிய வளரிளம் பருவத்தினர் அபாயகரமான தொழிலில் அமர்த்தப்படுவதை தடை செய்கிறது. மேலும் மற்ற பணியிடங்களில் வேலைக்கு அமர்த்தப்படும்போது கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகளையும் வலியுறுத்துகிறது.<br>• பள்ளிப் படிப்பிற்கு இடையூறு இல்லாத வகையில் குடும்பத் தொழில் மற்றும் கலைத் துறைகளில் சட்டத்தின் விதிமுறைகளை பின்பற்றி குழந்தைகளை ஈடுபடுத்துவதற்கு அனுமதி உண்டு. சர்க்கஸ் விளையாட்டில் மட்டும் குழந்தையை ஈடுபடுத்த அனுமதி இல்லை. |
| | தொழிற்சாலை சட்டம், 1948 (The Factories Act, 1948) | • 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளை வேலைக்கு அமர்த்துவதை தடை செய்தல் |



| | | |
|---|---|---|
| | சுரங்க சட்டம், 1952 | • 18 வயதிற்கு மேல் உள்ளவர்கள் மட்டுமே சுரங்கத்திற்குள் வேலை செய்வதற்கு அனுமதி உண்டு |
| | பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர் சட்டம், 1966 (The Beedi of Cigar Workers (Conditions of Employment) Act, 1956) | • 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளை பீடி மற்றும் சுருட்டு தொழிலில் ஈடுபடுத்துவதை தடை செய்கிறது. |
| | குழந்தைகள் (உழைப்பு அடமான) சட்டம், 1933 – | • குழந்தைகளின் உழைப்பை அடமானம் வைத்து செய்து கொள்ளும் ஒப்பந்தத்திற்கு தடை விதிக்கிறது. |
| | கொத்தடிமை முறை ஒழிப்பு சட்டம், 1976 (The Bonded Labour (Abolition) Act, 1976) – | • குழந்தை உழைப்புக்கு முன் பணம் கொடுப்பவரை தண்டனைக்குட்படுத்த முடியும். மேலும் கொத்தடிமையாக வேலை செய்யும் குழந்தைகளை மீட்கவும் முடியும் |
| குழந்தைத் திருமணம் | குழந்தைத் திருமணத் தடைச் சட்டம், 2006 (Prohibition of Child Marriage Act, 2006) | • பெண்ணின் திருமண வயது 18 (பூர்த்தியடைதல்)<br>• ஆணின் திருமண வயது 21 (பூர்த்தியடைதல்)<br>• மூன்று விதமான ஷரத்துக்கள் கொண்டது.<br>• குழந்தைத் திருமணத்தைத் தடுத்தல்<br>• குழந்தைத் திருமணத்திலிருந்து மீட்கப்பட்ட குழந்தைக்கு தேவையான பாதுகாப்பு அளித்தல்<br>• சட்டப்படி நடவடிக்கை எடுத்தல் |
| எச்.ஐ.வி / எய்ட்ஸால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் | எச்.ஐ.வி / எய்ட்ஸ் (தடுப்பு மற்றும் கட்டுப்படுத்துதல்) சட்டம், 2017 (The Human Immuno Deficiency Virus and Acquired Immune Deficiency Syndrome (Prevention and Control) Act, 2017) | • மருத்துவம், சுகாதாரம் மற்றும் உளவியலுக்கான உதவி அளித்தல்<br>• எச்.ஐ.வி நோயுள்ள குழந்தைகளை பாகுபாடுத்துவதிலிருந்து பாதுகாத்தல்<br>• எச்.ஐ.வி நோயுள்ள குழந்தைகளை பள்ளியில் அனுமதித்து கல்வி கற்கச் செய்தல் |
| மாற்றுத் திறனாளிகள் | மாற்றுத் திறனாளிகளின் உரிமைகளுக்கான சட்டம், 2016 (The Rights to Persons with Disabilities Act, 2016) | • மாற்றுத் திறனாளி குழந்தைகளின் வளர்ச்சியை மேம்படுத்துதல், அவர்களின் உரிமைகளுக்கு மதிப்பு அளித்தல் மற்றும் அவர்களை பாதுகாத்தல் |



| | | |
|---|---|---|
| | | • சுயமாக முடிவெடுத்தலுக்கும், சுதந்திரமாக செயல்படுவதற்கும் வாய்ப்பு அளித்தல்<br>• பாகுப்படுத்தாமை<br>• சமுதாயத்தில் முழுமையாகவும், திறமையுடனும் பங்கேற்க செய்தல்<br>• வேறுபாடில்லாமல் மரியாதை அளித்தல் மற்றும் மனித நேயத்துடன் நடத்துதல் |

The apex court judge said that according to recent National Crime Research Bureau (NCRB) data, in 2015, 42.39 per cent of children in conflict of law belong to families with incomes of Rs 25,000, 28 per cent belong to families with incomes between Rs 25,000 to Rs 50,000 and 2-3 per cent belong to families with incomes in the higher bracket of Rs 2 lakh to Rs 3 lakh.

*- Justice Thiru. Chandrachud, Supreme Court, New Delhi.*

புது டெல்லி, உச்ச நீதிமன்றம், மாண்புமிகு நீதியரசர் திரு. சந்திரசூட் அவர்கள், தன்னுடைய உரையில் தேசியக் குற்ற பதிவுகள் பணியகம் 2015ன் புள்ளி விவரங்களை மேற்கோள் காட்டி “குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு நாட்டில் நிலவும் வறுமை மற்றும் அவர்களது கையுறு நிலையையும் மாற்ற வேண்டும்” என்று குறிப்பிட்டுள்ளார்.

தேசியக் குற்ற பதிவுகள் பணியகம் 2015ன் புள்ளி விவரம்
(National Crime Research Bureau – NCRB data 2015)

| சட்டத்திற்கு முரண்பட்ட குழந்தைகளின் விகிதம் | குடும்ப வருமானம் |
|---|---|
| 42.39% | ரூ. 25000/- |
| 28% | ரூ. 25000/- முதல் ரூ 50000/- |
| 2 – 3% | ரூ. 2 – 3 இலட்சம் |



பிரிவு - 7

# குழந்தைகளுக்கான தேசிய செயல்பாட்டுத் திட்டம் 2016
# (National Plan of Action for Children 2016)

இந்திய அரசாங்கம் குழந்தைகள் பாதுகாப்பு குறித்த ஒரு விரிவான புரிதலை ஏற்படுத்தி இருப்பதால் 2016ல் குழந்தைகள் பாதுகாப்பு குறித்த ஒரு ஆய்வு அறிக்கையை தயாரித்தது. இந்த அறிக்கை குழந்தை உரிமைகள் சாசனத்தில் கூறப்பட்டுள்ள நான்கு உரிமைகளின் அடிப்படையில் குழந்தைகளுக்கான கொள்கை, சட்டம், செயல்பாடுகளை மதிப்பீடு செய்தது. குழந்தைகளுக்கான அனைத்து தகவல்களையும் ஆராய்ந்த பிறகு குழந்தைகளின் பிரச்சனைகளை நான்கு முக்கியமான நிலைகளாக பிரித்தது.

இதற்கு அடிப்படையாக நடைமுறையில் உள்ள அரசு சார்ந்த மற்றும் அரசு சாரா அமைப்புகள், அவற்றின் செயல்பாடுகள், எவ்வாறு மதிப்பீடு செய்யப்படுகின்றன என்ற கருத்துக்களை உள்ளடக்கி குழந்தைகளுக்கான பாதுகாப்பை எவ்வாறு செயல்படுத்த வேண்டும் என்றும், அதை அளவீடு செய்வதற்கான குறியீடுகளையும் குறிப்பிட்டது. குழந்தைகள் பாதுகாப்பு குறித்து பணியாற்றும் அனைத்து நிறுவனங்களுக்கும் இந்த மதிப்பீடு அனைவராலும் புரிந்துக்கொள்ளக்கூடிய வகையில் தொகுத்து அளித்துள்ளது.

## குழந்தைகள் அதிகம் பாதிப்படையக்கூடிய பிரச்சனைகள் - ஓர் தொகுப்பு

### அ. வாழ்வதற்கான ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்து பிரச்சனை

- அதிகமான தாய்-சேய் இறப்பு விகிதம், குறிப்பாக பச்சிளம் குழந்தை இறப்பு
- கிராமப் புறங்களில் பெண் குழந்தைகளின் இறப்பு விகிதம் அதிகமாக காணப்படுதல்
- குழந்தைகளிடையே காணப்படும் அதிக ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் இரத்த சோகை
- போதிய பராமரிப்பு மற்றும் மருத்துவ வசிகள் இல்லாமை
- குடி நீர் மற்றும் சுகாதாரத்தை பேணிக்காக்காததால் ஏற்படும் சீர்கேடு.



| விவரம் | தமிழ் நாடு | இந்தியா | ஆதாரம் |
|---|---|---|---|
| குழந்தை பாலின விகிதம் | 954 | 919 | தே.கு.சு.நி. IV (NFHS IV) |
| 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதம் | 27 | 50 | |
| சிசு மரண விகிதம் (பிறந்ததிலிருந்து ஒரு வருடத்திற்குள் இறக்கும் குழந்தைகள்) | 20 | 41 | |
| 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் குள்ளத்தன்மை | 27.1 | 38.4 | |
| 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் உடல் மெலிவுத் தன்மை | 19.7 | 21 | |
| 5 வயதிற்குட்பட்ட உடல் எடை குறைவான குழந்தைகள் | 23.8 | 35.8 | |
| 6 முதல் 59 மாதம் வரையுள்ள குழந்தைகள் இடையே காணப்படும் இரத்த சோகை நிலை | 50.7 | 58.6 | |

## ஆ. கல்வி மற்றும் முன்னேற்றத்தில் பிரச்சனை

- குழந்தைகள் மழலையர் கல்வி பெறுவதில் பிரச்சனை
- தொடக்க கல்வி நிலையிலேயே குழந்தைகள் பள்ளி இடை விலகுதல்
- போதிய பாதுகாப்பு மற்றும் பள்ளிக்கூட கட்டமைப்பு வசதிகள் இல்லாமை
- தொடக்க கல்வியின் தரம் குறைந்து காணப்படுதல்
- 15 வயதிற்கு மேற்பட்ட குழந்தைகள் தேவையான கல்வி (அ) தொழிற்கல்வி (அ) திறன் மேம்பாட்டு பயிற்சி பெறாமல் இருத்தல்
- இலவச கட்டாய கல்வி சட்டத்தின்படி பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் போதிய அளவு இல்லாமை.

| விவரம் | தமிழ் நாடு | இந்தியா | ஆதாரம் |
|---|---|---|---|
| 3ம் வகுப்பில் வாசிக்கும் திறன் கொண்டவர் | 10.2 | 27.3 | ASER (2018) |
| 8ம் வகுப்பில் வாசிக்கும் திறன் கொண்டவர் | 73.2 | 73 | ASER (2018) |
| 3ம் வகுப்பில் கணிதம் | 25.9 | 28.2 | ASER (2018) |
| 8ம் வகுப்பில் கணிதம் | 50 | 44.1 | ASER (2018) |

## இ. குழந்தைகளின் பாதுகாப்பில் பிரச்சனை

- ஆண் / பெண் பாகுபாடு மற்றும் குழந்தைகளை புறக்கணித்தல்
- கருவிலேயே குழந்தைகளை கொலை செய்தல் (கருக்கொலை) மற்றும் சிசுக்கொலை
- குழந்தைத் தொழிலாளரின் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுதல்
- குழந்தைகளைக் கடத்துதல், குழந்தைகள் இடம்பெயர்தல்



- சட்டப்பூர்வ வயதிற்கு முன்பே திருமணம் முடிக்கும் பெண் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகமாக காணப்படுதல்
- குழந்தைகளுக்கு எதிராக நடக்கும் குற்றங்களில் குறிப்பாக அதிகரித்து வரும் பாலியல் குற்றங்கள்
- சிறு சிறு வழக்குளில் பதிவு செய்யும் சட்டத்திற்கு முரண்பட்ட குழந்தைகளின் பின்னணியை ஆய்வு செய்யும்பொழுது ஆரம்ப கல்விக்கு பின்னர் பள்ளிக்கு செல்லாமல் இருப்பவர் மற்றும் பொருளாதார நிலையில் பின்னடைந்த குடும்பங்களிலிருந்து வரும் குழந்தைகளின் எண்ணிக்கையே அதிகமாக உள்ளது.
- சட்டத்திற்கு முரண்பட்ட குழந்தைகளின் மறுவாழ்விற்கான வாய்ப்புகள் போதிய அளவு இல்லாமை
- குழந்தைக்கு எதிரான எல்லாவிதமான கொடுமைகள் குறித்த தகவல்கள் தொகுப்பு போதிய அளவு இல்லாமை
- இணையதளத்தின் மூலமாக நடைப்பெறும் பாலியல் துன்புறுத்தல்கள்

| விவரம் | தமிழ் நாடு | இந்தியா | ஆதாரம் |
|---|---|---|---|
| குழந்தைத் தொழிலாளர்கள் (எண்ணிக்கையில்) | 151437 | 4353247 | சென்சஸ் 2011 |
| குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் (எண்ணிக்கையில்) | 2856 | 106958 | தே.கு.ப.ப. 2016 (NCRB) |
| இளம் குற்றவாளிகள் (எண்ணிக்கையில்) | 2217 | 35849 | |
| பாலியல் வண்கொடுமைகுள்ளான குழந்தைகள் (எண்ணிக்கையில்) | 2039 | 39827 | |
| குழந்தைகளை கடத்துதல் (எண்ணிக்கையில்) | 317 | 9034 | |
| குழந்தைத் திருமணம் (15-19 வயதில் கருவுற்ற தாய்மார்கள் (அ) தாய் ஆனவர்கள்) | 5% | 7.9% | தே.கு.சு.க. IV (NFHS IV) |

## ஈ. குழந்தைகள் பங்கேற்பதில் பிரச்சனைகள்

- குழந்தைகள் தங்களின் சொந்த உரிமைகள் மற்றும் அதை அடைவது பற்றியும், குழந்தைகள் நலனிற்கான திட்டங்கள் பற்றிய தகவல்களை அறிவதில் தொய்வு.
- குழந்தைகளின் விருப்பங்களை செவி சாய்க்காமல் பெரியவர்களின் எண்ணங்களின் அடிப்படையில் குழந்தைகளை வழிநடத்துதல்.
- குழந்தைகளுடைய விருப்பங்களை தெரிவிப்பதற்கான நம்பிக்கையையும், அறிவுத் திறனையும் மற்றும் திறமைகளையும் மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தாமை.
- குழந்தைகள் பிரச்சனைகளில் சிக்கிக்கொண்டால் எவ்வாறு அதை கையாளுவது மற்றும் அப்பிரச்சனையிலிருந்து எவ்வாறு மீண்டு வரவேண்டும் என்பதற்கு குழந்தைகளை தயார் செய்யும் செயல்பாட்டில் தொய்வு.



## ஒருங்கிணைந்து செயல்படுவது குழந்தையின் பாதுகாப்பிற்கு அவசியம்

### உடல் மற்றும் மன ஆரோக்கியம்

- உடல் ஆரோக்கியம் பேணுதல்
- மன நலம் காத்தல்
- போதைப் பொருட்களுக்கு அடிமையாகாமல் இருத்தல்

### கல்வி

- தரமான கல்வி
- பள்ளிகள் பாதுகாப்பான இடமாக மாறுதல்
- சுய மதிப்பீடு
- தன்னம்பிக்கை வளர்த்தல்
- குடும்ப சமூக மதிப்பீடுகள்.
- மனித நேயம் வளர்த்தல்

### குழந்தைகள் பாதுகாப்பு

- குழந்தைகள் மீதான வன்முறையை தடுத்தல்
- பள்ளி மற்றும் இல்லங்களில் - குழந்தை பாதுகாப்பு கொள்கை
- அனைத்து துறைகளுடனும் ஒருங்கிணைந்து செயல்படுதல்

### காவல் மற்றும் நீதித் துறை

- குழந்தை நல காவலர்கள்
- விரைவான நீதி வழங்குதல்
- பாதிக்கப்பட்ட குழந்தையின் மறுவாழ்வு

# பிரிவு - 8

# குழந்தை பாதுகாப்பு அனைவரின் பொறுப்பு




**அரசாங்கம்**
- குழந்தை பாதுகாப்பு கொள்கை
- சட்டம் இயற்றுதல்
- குழந்தை பாதுகாப்பை உறுதி செய்யும் சூழலை உருவாக்குதல்
- குழந்தை உரிமை அடிப்படையில் செயலாக்க திட்டங்களை கொண்டுவருதல்

**உள்ளாட்சி மற்றும் பேரூராட்சி**
- அரசின் கொள்கைகளையும், அரசு திட்டங்களையும் மக்களிடையே கொண்டு சேர்த்தல்
- குழந்தையின் சீரிய நலனை கருத்தில் கொண்டு செயல்படுதல்

**உள்ளூர் சமூகங்கள்:**
- சமத்துவ சமுதாயத்தை உருவாக்குதல்
- குழந்தைகளுக்கேற்ற கலாச்சார சூழலை அமைத்தல்
- குழந்தை பாதுகாப்பை உறுதி செய்தல்
- குழந்தைகளின் குரலை பிரதிபலித்தல்


**குழந்தை நல திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்**
- திட்டமிட்ட பொறுப்பான களப்பணி
- தொடர் கண்காணிப்பு

**பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள்**
- அன்புடன் கூடிய பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு
- குழந்தைகளின் அன்றாட செயல்பாடுகளை கவனித்தல்
- மன நலம் பேணுதல்
- பொறுப்பான பெற்றோராக இருத்தல்

**சமுதாயம் சார்ந்த நிறுவனங்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள்**
- குழந்தை உரிமைகள் சார்ந்து வேலை செய்தல்
- குழந்தைகளுக்கான உரிமை மீறல் நடக்காவண்ணம் கண்காணித்தல்

## பாதுகாப்பு வளையத்தின் முக்கிய பொறுப்பாளர்கள்

பாதுகாப்பு வளையத்தின் மையகருத்துக்களான தடுத்தல் மற்றும் பாதுகாத்தல் ஆகிய இரண்டு செயல்பாடுகளும் ஒன்றோடு ஒன்று இணையுமாறு செயல்படுத்தப்பட வேண்டும். குழந்தையை மையப்படுத்திய இந்த பாதுகாப்பு வளையம் நான்கு அடுக்குகளை கொண்டுள்ளது. அடிப்படையான கிராம அளவிலிருந்து மாவட்டம், மாநிலம் மற்றும் தேசிய அளவுவரை குழந்தை பாதுகாப்பிற்கு உண்டான செயல்பாடுகளை இயக்கும் அமைப்புகள், பொறுப்பாளர்களை இந்த வளையத்தில் வகைப்படுத்தியுள்ளதை காணலாம். அரசு அறிவிக்கும் அனைத்து நலத்திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதற்கும், குழந்தையை சென்றடைவதை உறுதிபடுத்துவதற்கும் பொறுப்பு வாய்ந்தவர்களாக அமைகின்றனர்.



பிரிவு - 9

# குழந்தை பாதுகாப்பு - கனவு மெய்ப்படும்...

## மனிதவள மேம்பாட்டிற்கான முதலீடு குழந்தை பாதுகாப்பு திட்டங்களே!

பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு குழந்தைகளுக்கு உரிய நேரத்தில் சென்றடைந்ததால் எவ்வாறு அவர்களின் வாழ்க்கையை மலர்ந்து மணம் வீசுகிறது என்பதற்கு தர்மபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டத்தில் உள்ள ஒரு சிறு கிராமத்தில் பிறந்து வளர்ந்து, தற்பொழுது சொந்த தொழில் முனைவோராக மாறிய திரு. முத்துராஜ் அவர்கள் உதாரணமாக திகழ்கிறார்.

அப்பா, அம்மா இருவரும் கூலிக்காக விவசாய வேலை செய்யும் வேளாண் குடும்பத்தை சார்ந்தவர்கள். குடும்பத்தின் பொருளாதார பிரச்சனையின் காரணமாக 11 வயதிலேயே முத்துராஜ், கல் உடைக்கும் வேலைக்கு அனுப்பப்பட்டார். அச்சமயம் மாவட்டத்தில் குழந்தை தொழிலாளர் மீட்பு திட்டம் நடைமுறையில் இருந்தது. திரு. N. சரவணன், திட்ட இயக்குநர், தேசிய குழந்தை தொழிலாளர் திட்டம், தர்மபுரி அவர்களின் முயற்சியோடு மீட்கப்பட்ட முத்துராஜ், குழந்தை தொழிலாளர் சிறப்பு பயிற்சி திட்ட மையத்தின் மூலம் 8ம் வகுப்பு வரை படித்தார். அதன்பிறகு சிறப்பு பள்ளியிலிருந்து வெளிவந்து அரசினர் பள்ளியில் சேர்ந்து 10ம் வகுப்பு படித்து முடித்தார். அதன் பின்னர் தேசிய குழந்தை தொழிலாளர் திட்டத்தின் மூலம் அளிக்கப்பட்ட தொழில் முனைவோர்க்கான திறன் மேம்பாட்டு பயிற்சியை 2016ல் முடித்தார். பிறகு இந்த மாவட்டத்திலேயே கிடைத்த வேலைகளைப் பார்த்துக்கொண்டிருந்தார். 2017ல் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டத்தில் பயின்று 18 வயது பூர்த்தி அடைந்த 400 நபர்களுக்கு பல்வேறு திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் பயிற்சி பெற்ற இவருக்கு தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் நுகர்வோர் வாடகை மையம் ஏற்படுத்த டிராக்டர் உட்பட 13 வகையான வேளாண்கருவிகள் இந்தியன் வங்கியின் மூலமாக ரூ. 26,29,962/- வங்கி கடன் 13.03.2017 அன்று வழங்கப்பட்டது. இந்த திட்டத்தின் கீழ் உதவி பெறுவதற்கு அடிப்படையாக இருந்த முன்பணம் 10 இலட்சம் ரூபாயை இந்திய வங்கி மானியமாக வழங்குவதற்கு பரிந்துரை செய்யப்பட்டது முக்கியமான நிகழ்வாகும்.


தினத்தந்தி

குழந்தை தொழிலாளர் திட்ட முன்னாள் மாணவர் முத்துராஜிக்கு வேளாண் கருவிகளை கலெக்டர் விவேகானந்தன் வழங்கியபோது எடுத்தபடம்.

குழந்தை தொழிலாளர் திட்ட முன்னாள் மாணவருக்கு

ரூ.26 லட்சம் மதிப்பில் வேளாண் கருவிகள்

கலெக்டர் விவேகானந்தன் வழங்கினார்

தர்மபுரி,மார்ச்.15-
தொழில் முனைவோர் திறன் மேம்பாட்டு பயிற்சி பெற்ற குழந்தை தொழிலாளர் திட்ட முன்னாள் மாணவருக்கு ரூ.26 லட்சம் மதிப்பில் வேளாண் கருவிகளை கலெக்டர் விவேகானந்தன் வழங்கினார்.

திறன்மேம்பாட்டு பயிற்சி

தர்மபுரி மாவட்டத்தில் கடந்த 2005-ம் ஆண்டு தேசிய குழந்தை தொழிலாளர் நலவாரியத்தின் மூலம் பென்னாகரம் தாலுகாவை சேர்ந்த முத்துராஜ் என்ற 11 வயது சிறுவன், கல்குவாரியில் இருந்து மீட்கப்பட்டார். இதைத்தொடர்ந்து குழந்தை தொழிலாளர் திட்ட சிறப்பு பயிற்சி மையத்தில் 7 மற்றும் 8-ம் வகுப்பை முடித்த அவர் பின்னர் பொதுப்பள்ளியில் 10-ம் வகுப்பை முடித்தார். இந்த நிலையில் தமிழக அரசின் சிறப்பு நடவடிக்கை மூலம் தேசிய குழந்தை தொழிலாளர் திட்ட முன்னாள் மாணவர்களில் 500-க்கும் மேற்பட்டவர்களுக்கு தொழில் முனைவோருக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட்டது.

இந்த பயிற்சியை 21 வயதில் முத்துராஜ் முடித்தார். இந்த பயிற்சியை முடித்த குழந்தை தொழிலாளர் திட்ட முன்னாள் மாணவர்களை தொழில் அதிபர்களாக உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் தமிழக அரசின் வேளாண் பொறியியல் துறை சார்பில் முத்துராஜிக்கு ரூ.26 லட்சம் மதிப்பிலான வேளாண் கருவிகள் வாடகை மையம் அமைக்க வழங்கப்பட்டது. இந்த கருவிகளை கலெக்டர் விவேகானந்தன் வழங்கினார்.

அடையாள அட்டை

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் குழந்தை தொழிலாளர் மாணவர்களின் பெற்றோர் 12 பேருக்கு தொழிலாளர் நல வாரியத்தின் சார்பில் அடையாள அட்டைகளை கலெக்டர் வழங்கினார். இதில் தேசிய குழந்தை தொழிலாளர் திட்ட இயக்குனர் சரவணன், செயற் பொறியாளர் குணசேகரன், தொழிலாளர் நல அலுவலர் கோட்டீஸ்வரி, சமூக பாதுகாப்பு திட்ட அலுவலர் நிர்மலதா, உதவி பொறியாளர் அறிவழகன் மற்றும் திட்ட மேலாளர்கள், பயனாளிகள் கலந்து கொண்டனர்.

கிட்டத்தட்ட 7 வருடங்கள், தர்மபுரி தேசிய குழந்தை தொழிலாளர் திட்ட இயக்குநரும் அவருடன் பணிபுரியும் அலுவலர்கள் அனைவரும் முத்துராஜின் வாழ்வில் வளம் சேர்ப்பதற்காக தொடர் கண்காணிப்பில் இருந்தார்கள். மேலும், தொழில் முனைவோருக்கான புதிய திட்டம் அரசால் அறிவிக்கப்பட்டவுடன் அத்திட்டத்தின் மூலம் முத்துராஜை பயன்பெறச்செய்தார்கள். முத்துராஜ் கொடுக்கப்பட்ட சந்தர்ப்பங்களை திறமையாக பயன்படுத்தி தனது வாழ்வை மேம்படுத்திக்கொண்டார்.

விவசாய தொழிலாளி குடும்பத்தில் பிறந்து, வாழ்வின் ஓரங்களில் வசதியின்றி பாதிக்கப்பட்ட முத்துராஜ் தற்போது ரூபாய் 30 இலட்சம் பெருமான தொழில் முனைவோராக மாறியிருத்தல் குழந்தை பாதுகாப்பு முறையின் முடிவான வெற்றியாகும்.

## ஊர் கூடினால் தேர் ஓடும்

நமது கோவில்களில் உள்ள தேரை இழுப்பதற்கு நூற்றுக்கணக்கில் ஆட்கள் தேவை. கோவில் பணியாளர்களால் மட்டும் இது முடியாது. பல ஊர்களில் கோவில் தேரை இழுப்பது அவர்களின் குடும்ப பொறுப்பு என நினைக்கிறார்கள். அவர்கள் அந்த ஊரில் இல்லையென்றாலும் தேர் திருவிழாவின்பொழுது வந்து பங்குகொள்கிறார்கள்.

குழந்தைகள் பாதுகாப்பை உறுதிசெய்வது கிட்டதட்ட தேர் இழுப்பதுபோலத்தான். அரசாங்கத்தால் மட்டுமே அனைத்து குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய இயலாது.

சரியான தருணத்தில் தகுதி வாய்ந்தவர்களால் மீட்கப்பட்டு, அரசு அமைப்புகளின் உதவியோடு, சமூக நலனில் அக்கறைகொண்ட ஒரு பொறியியல் கல்லூரியின் மனித நேய செயல்பாட்டின் மூலம் ஒரு இளம் பெண் பொறியாளராக உருவான ரம்யா ஒரு உதாரணமாக இருக்கிறார்.

2012ம் வருடம் மார்ச் மாதம் இந்திய குழந்தைகள் நலச் சங்கம் - தமிழ் நாடு (Indian Child Council for Welfare-Tamil Nadu), சைல்டுலைனுக்கு ஒரு பெண் குழந்தையிடமிருந்து அழைப்பு வந்தது. “தான் 12ம் வகுப்பு தேர்வு எழுதிக்கொண்டிருப்பதாகவும், தேர்வுமுடிந்த உடன் குடும்பத்திலிருந்து பிரிந்து வருவதற்கு உதவி செய்ய வேண்டும்” என்பதே அக்குழந்தையின் கோரிக்கையாக இருந்தது. உடனே சைல்டுலைன் பணியளார்கள் அந்த குழந்தை படிக்கும் பள்ளிக்கு சென்றனர். வகுப்பு ஆசிரியரை சந்தித்தபொழுது அவர்களுக்கும் அக்குழந்தையின் பிரச்சனை தெரிந்திருந்தது.

ரம்யாவிற்கு அப்பா இல்லை. அம்மா பூ கட்டிவிற்று வாழ்க்கையை நடத்திவருகிறார். ரம்யாவின் அண்ணாவும் பூ வியாபாரத்தை செவ்வனே நடத்தி வந்தாலும், குடிபழக்கத்திற்கு அடிமையாகி குடும்பத்தைக் கவனிப்பதில்லை. இந்நிலையில் ரம்யாவின் அம்மாவிற்கு தெரிந்த ஒரே வழி ரம்யாவை வசதியான குடும்பத்தில் திருமணம் செய்வதுதான். ரம்யாவின் அம்மாவும், பாட்டியும் சேர்ந்து வசதியான குடும்பத்தில் ரம்யாவை திருமணம் செய்துவைத்துவிடலாம் என்று முடிவு செய்தார்கள். ரம்யாவிற்கு தேர்ந்தெடுத்த மாப்பிள்ளைக்கு வயது 40. திருமணமாகி மனைவியை இழந்தவர். அவரின் மகனுக்கு 14 வயதாகிறது. இந்நிலையில் திருமணத்திற்கு உடன்படாத ரம்யாவிற்கு எப்படி திருமணத்தை தடுத்து நிறுத்துவது என்று தெரியவில்லை. நேரடியாக சைல்டுலைனை தொடர்பு கொண்டிருக்கிறார். சைல்டுலைன் ஒரு குழுவாக சென்று தேர்வு முடிந்த அன்று பள்ளியிலிருந்து ரம்யாவை நேரடியாக அழைத்து வந்துவிட்டார்கள். உடனடியாக குழந்தை நல குழு முன் ரம்யாவை முன்னிலைப்படுத்தினார்கள். ராம்யாவை பார்க்க வந்த தாயாரிடம் குழந்தை நல குழுவின் முன்பு தெளிவாக தனக்கு வீட்டிற்கு திரும்பி வர விருப்பம் இல்லை என்றும், திருமணம் செய்துகொள்ள சம்மதிக்க போவதில்லை என்றும், தான் தொடர்ந்து படிக்கபோவதாகவும் கூறிவிட்டார்.

ICCW-TN, எடுத்த முயற்சிகள், ரம்யாவை சென்னையில் உள்ள பிரபலமான கல்லூரியில் கட்டணம் இல்லாமல் பயிலுவதற்கான அனுமதி கிடைத்தது. பிற செலவுகளுக்கு மனித நேயம் மிகுந்த ஒரு நபர் மாதந்தோறும் ரூ. 4,000/- தந்தார். மேலும் கல்லூரியில் சேர்ந்த பின்னர், கல்லூரி அதிகாரிகள் ரம்யாவின் நிலை அறிந்து இலவசமாக விடுதியில் தங்கி பயில்வதற்கு அனுமதித்தார்கள்.

ICCW-TN சமூக பணியாளர்கள் அடிக்கடி ரம்யாவை சென்று பார்த்து தேவையான உதவிகள் செய்தார்கள். இன்று ரம்யா இந்தியாவின் தொழிற்துறை இளைஞர்களுக்கு ஒரு முன்னோடி. தடைக்கற்களை படிக்கட்டுகளாக மாற்றி தனக்கென ஒரு வாழ்க்கையை ஏற்படுத்திகொண்ட ஒரு இளம்பெண் ரம்யா. வளர்ந்து வரும் வளரிளம் பெண்களுக்கு ஒரு வழிகாட்டி.

# குழந்தைப் பாதுகாப்பு



unicef
for every child